பக்கங்கள் 12

விலை ரூ. 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 38
கதிர் : 187

வியாழக்கிழமை 01 ஜூன் 2023

வைகாசி 18 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# மகாவலி 'ஜே' வலயத்துக்கு ஒருபோதும் ஒத்துழையோம்!

## முல்லை. ஒருங்கிணைப்புக் குழுவில் தீர்மானம்
## தகவல்களை வழுங்குவதில்லை என்றும் முடிவு

முல்லைத்தீவு, ஜூன் 1

மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையால் 'ஜே' வலயத்துக்கு கோரப்பட்டுள்ள தகவல்களை பிரதேச செயலர்கள், மாவட்டச் செயலர்கள் வழங்கக்கூடாது என்று முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நேற்றுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. »11

## எரிபொருள் விலைகளில் மாற்றம்

கொழும்பு, ஜூன் 1

நேற்று நள்ளிரவு முதல் எரிபொருள் விலைகளில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

ஒக்ரேன் 92 ரக பெற்றோல் ஒரு லீற்றர் 15 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. ஒக்ரேன் 92 லீற்றர் ஒன்றின் புதிய விலை 318 ரூபா என »10

## ரணில் இன்று விசேட அறிவிப்பு!

கொழும்பு, ஜூன் 1

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று இரவு நாட்டு மக்களுக்கு விசேட அறிக்கை ஒன்றை விடுக்கவுள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இன்று இரவு 8 மணிக்கு ஜனாதிபதி விசேட அறிவித்தலை விடுப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-எ-இ)



## சட்டவிரோத விகாரைக்கு எதிராக 3ஆம் கட்ட போராட்டம் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஜூன் 1

வலி.வடக்கு, தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட பௌத்த விகாரைக்கு எதிராக நேற்று மூன்றாம் கட்டமாகப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட் »11

## யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் இறுக்கப்படும் நடைமுறைகள்!

### மீறுவோருக்கு தண்டம் விதிக்கவும் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ்ப்பாணம் நகர் பகுதியில் இன்று முதல் போக்குவரத்துப் பொலிஸாரின் 24 மணிநேரக் கண்காணிப்பு இருக்கும் என்றும், போக்குவரத்து விதிமுறைகளை மீறுவோருக்கு உடனடியாகத் தண்டம் விதிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டம் »10

### தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள

## சட்டவிரோத விகாரை விடயத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பின்னடிப்பு

### ஆராயவேண்டும் என்கிறார் அமைச்சர் டக்ளஸ்

யாழ்ப்பாணம், ஜூன் 1

தையிட்டியில் சட்டவிரோதமாக இராணுவத்தினரால் நிர்மாணிக்கப்பட்டுள்ள விகாரை தொடர்பில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நேற்று ஆராயப்பட்டபோதும் எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படவில்லை.

யாழ். மாவட்ட ஒருங் »10

### பொருளாதார நெருக்கடி எதிரொலி;

## இடைவிலகல் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் பாடசாலை இடைவிலகல் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளமை தெரியவந்துள்ளது.

கடந்த ஆண்டில் 355 பேர் பாடசாலை இடைவிலகியுள்ள நிலையில் இந்த ஆண்டின் முதல் 4 மாதங்களிலேயே 200 பேர் பாடசாலைகளிலிருந்து இடைவிலகியுள்ளனர். அதேபோன்று வரவு ஒழுங்கற்ற மாணவர்களின் எண்ணிக்கையும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகரித்துள்ளது. »11

## வீதியில் மாணவிகளுடன் சேட்டை; தடுத்த மாணவன் மீது தாக்குதல்!

யாழ்ப்பாணம், ஜூன் 1

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எழுதிவிட்டு வீடு திரும்பிய மாணவிகளுடன் சேட்டையில் ஈடுபட்ட இளைஞர்களைத் தட்டிக்கேட்ட மாணவன் மூர்க்கத்தனமாகத் தாக்கப் »10

## தனியார் கல்வி நிறுவனச் சூழலில் இனிமேல் தீவிர பொலிஸ் ரோந்து!

யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ். மாவட்டத்தில் அமைந்துள்ள தனியார் கல்வி நிறுவனங்களை அண்மித்த பிரதேசங்களில் இனிவரும் நாள்களில் பொலிஸாரின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப் »11

## மீற்றர் இல்லாத ஓட்டோக்களுக்கு தரிப்பிடங்கள் இனி இல்லை!

»11

## பாலியாற்றுக் குடிநீர்த்திட்டம் ஆராய்வதற்கு குழு நியமனம்

யாழ்ப்பாணம், ஜூன் 1

கீழ் பாலியாற்று வடி நிலத்திலிருந்து யாழ்ப்பாண குடாநாட்டுக்கான குடிதண்ணீர் விநியோகம் தொடர்பில் விரிவாக ஆராய்வதற்காக 5 பேர் கொண்ட குழு யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவால் நேற்று நியமிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இந்தக் குழுவில், வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களப் »10

## இந்திய மீனவரைக் கட்டுப்படுத்த கடற்படையிடம் வல்லமையில்லை!

'சேம் சைட் கோல்' அடித்தார் டக்ளஸ் »11

## தேவாலயத் திருவிழாவில் 25 பவுண் நகைகள் 'அபேஸ்'

யாழ்ப்பாணம், ஜூன் 1

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இருபாலைப் பகுதியிலுள்ள தேவாலயம் ஒன்றின் திருவிழா »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தைகளில் அறவிடப்படும் கழிவு: ஒருங்கிணைப்புக்குழுவில் சர்ச்சை

யாழ்ப்பாணத்திலுள்ள மரக்கறிச் சந்தைகளில் விவசாயிகளிடம் 10 சதவீதக் கழிவு அறவிடப்படுவது தொடர்பில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நேற்றுப் பெரும் சர்ச்சை எழுந்தது.

இந்த விடயம் தொடர்பில் வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்கள உதவி ஆணையாளர் கருத்துத் தெரிவிக்கையில்; சந்தைகளில் கழிவு அறவிடுவதை நிறுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. சந்தைகளைக் குத்தகைக்கு வழங்கும்போது இது தொடர்பில் குத்தகைக்கு எடுப்பவர்களுடன் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளும்போது 10 சதவீதக் கழிவு அறவிடக்கூடாது என்றே கூறுகின்றோம். எத்தனை தடவைகள் கூறினாலும் இந்த விடயம் பற்றித் தொடர்ந்து பேசினாலும் கழிவு அறவிடப்படுகின்றது. இது தொடர்பில் உற்பத்தியாளர்கள் (விவசாயிகள்) முறைப்பாடு செய்வதில்லை. தமது உற்பத்திப் பொருள்களை ஒப்படைக்கும் போது அதற்குரிய பற்றுச்சீட்டை அவர்கள் பெறுவதில்லை. அவர்கள் ஆதாரங்களுடன் எமக்கு முறைப்பாடளித்தால் நாம் நடவடிக்கை எடுக்க முடியும் - என்றார்.

அப்போது நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன், நீங்கள் விவசாயிகள் மீது குற்றம் சுமத்தாதீர்கள். அதிகாரிகளின் ஒழுங்கான கண்காணிப்பு இருந்தால் இவ்வாறு நடக்காது. அவர்கள் 10 சதவீதம் கழிவு எடுக்கத்தான் போகின்றார்கள் என்றால் அந்தக் கழிவு மூலமான அவர்களது வருமானத்துக்கும் பிரதேசசபை வரியை விதித்து அந்தப் பணத்தைப்பெற்று விவசாயிகளுக்கு நன்மையைச் செய்யலாம் என்று கூறினார்.

விவசாய சங்கப் பிரதிநிதி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்; எங்கள் மீது குற்றம் சுமத்தாதீர்கள். கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளமை வெறும் கண்துடைப்புத்தான். தம்புள்ளயிலிருந்து கொண்டு வரப்படும் மரக்கறிகளுக்கு கழிவு அறவிடப்படுவதில்லை. நிலத்துக்கு கீழ் விளையும் பொருள்களுக்குக் கழிவு அறவிடுவதில் நியாயம் உண்டு. நிலத்துக்கு மேல் விளையும் பச்சைமிளகாய் போன்றவற்றுக்கு 10 சதவீதக் கழிவு அறவிடுவதில் என்ன நியாயம் இருக்கின்றது? இப்போதும் திருநெல்வேலி மற்றும் மருதனார்மடம் சந்தைகளில் கழிவு அறவிடுகின்றார்கள் என்று சுட்டிக்காட்டினார்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர், சந்தைகளில் கண்காணிப்புக் குழுக்கள் இருந்தாலும், சந்தை நடவடிக்கைகள் அதிகாலை 3 மணிக்கு ஆரம்பமாகும். அந்த நேரத்துக்கு எமது அலுவலர்கள் செல்வதில் நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றன. சந்தைக் கழிவு தொடர்பில் விவசாயிகள் முறைப்பாடு செய்வதில்லை. அவர்கள் பற்றுச் சீட்டுடன் முறைப்பாடு செய்தால் நடவடிக்கை எடுப்போம். இந்தச் சந்தைக் கழிவு விவகாரத்தின் பின்னணியில் பெரும் மாபியாக்கள் இருக்கின்றனர். சந்தைகளில் கழிவு அறவிடும் இடைத்தரகர்களைக் கண்டறிவதும் கடினம். விவசாயிகள் தமது உற்பத்திகளைக் கொண்டு வந்து சந்தையில் தமது விற்பனையாளரிடம் கொடுத்துவிட்டுச் செல்வதையே விரும்புகின்றார்கள். அவர்கள் கழிவுகள் தொடர்பில் பேசினாலும் முறைப்பாடு செய்வதில்லை. சந்தைக் கழிவு தொடர்பில் நாம் கடுமையான நடவடிக்கை எடுத்தால் குத்தகைகாரர்கள் விவசாயிகளிடமிருந்து உற்பத்திப் பொருள்களைக் குறைந்த விலைக்கு கொள்வனவு செய்வார்கள். இதனால் விவசாயிகள்தான் பாதிக்கப்படுகின்றனர் என்று குறிப்பிட்டார்.

அப்போது நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், அப்படியானால் உழவர் சந்தைகளை உருவாக்கினால் இவ்வாறான பிரச்சினை ஏற்படாதுதானே என்று கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளித்த உள்ளூராட்சி உதவி ஆணையாளர், அது சாத்தியமற்றது. விவசாயிகள் தமது உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்தால் அவர்கள் தமது தோட்டத்தில் வேறு வேலைகளைச் செய்ய முடியாது என்று குறிப்பிட்டார். கழிவு தொடர்பில் இறுக்கமான நடவடிக்கையை எடுக்குமாறு ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்ததைத் தொடர்ந்து இந்த விடயம் முடிவுக்கு வந்தது. (ஓ.5)

# எழுத, வாசிக்கத் தெரியாத மாணவர்கள் 9ஆம் தரத்தில்

### யாழ். மாவட்டத்தின் அவலநிலை

**யாழ்ப்பாணம், ஜூன் 1**

**யாழ்ப்பாணத்தில் 9ஆம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவர்கள் எழுத, வாசிக்கத் தெரியாத நிலையில் இருக்கின்றார்கள். இப்படியான மோசமான நிலை யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்றது என்று பிரதேச செயலர்கள் நேற்றைய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டினார்கள்.**

பாடசாலை இடைவிலகிய மாணவர்களை மீளிணைத்தல் தொடர்பில் பிரதேச செயலர்கள் சுட்டிக்காட்டும் போதே இந்த விடயத்தை தெரிவித்தனர்.

பாடசாலையிலிருந்து இடைவிலகிய மாணவர்களை மீளவும் தரம் 9 இல் சேர்க்கும்போது அவர்களுக்கு எழுத, வாசிக்கத் தெரிவதில்லை. அவர்கள் அந்த வகுப்பிலேயே பேசாமல் இருக்கின்றனர். இவ்வாறு பல வகுப்புக்களில் நடைபெறுகின்றன என்று பிரதேச செயலர்கள் தெரிவித்தனர்.

வலயக் கல்விப் பணிப்பாளர்களும் அவ்வாறு இடம்பெறுவதை ஏற்றுக்கொண்டனர். ஆரம்பக் கல்வி சரியாகப் பயிலாத மாணவர்களால் இந்த நிலைமை ஏற்படுவதாகக் குறிப்பிட்டனர். இதனைத் தீர்ப்பதற்கு பாடசாலைகளில் அவ்வாறான மாணவர்களை இனம் கண்டு அவர்களுக்கு ஆரம்பக் கல்வி போதிக்கப்படுகின்றது. ஆனால், இது நடைமுறையில் முழுமையான சாத்தியமான விடயமல்ல என்றும் தெரிவித்தனர். மேலும் கொரோனா காரணமாக இவ்வாறு ஆரம்பக் கல்வியை முறையாகப் பெற்றுக்கொள்ளாத மாணவர்கள் எண்ணிக்கை அதிகமாகவுள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டினர். (ஓ.5)

## கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்துவதற்கு குழு

யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ். மாவட்டத்தில் கட்டாக்காலி நாய்களால் ஏற்படும் விபத்துக்களைத் தணிப்பதாக அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு எவ்வாறான பொறிமுறையைக் கையாளலாம் என்பதைக் கண்டறிவதற்கு 5 பேர் கொண்ட குழு யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவால் அமைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி, யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன், வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் மருத்துவர் வசீகரன், யாழ். மாநகரசபை ஆணையாளர் த.ஜெயசீலன், யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோரே இந்தக் குழுவில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

கட்டாக்காலி நாய்களால் இந்த ஆண்டில் மாத்திரம் 6 உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக போதனா மருத்துவமனைப் பணிப்பாளரால் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் அவயவங்கள் இழப்பும் ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்துவதற்கு பெண் நாய்களுக்கு கருத்தடை ஊசி போடப்படுவதாக வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளரால் தெரிவிக்கப்பட்டது. 2 ஆயிரத்து 40 நாய்களுக்கு இந்த ஆண்டு ஊசி ஏற்றப்பட்டுள்ளதாகவும் மேலதிக நிதி ஒதுக்கீடு இல்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. கட்டாக்காலி நாய்களைக் கொல்ல முடியாது என்பதால் அவற்றைக் கட்டுப்படுத்துவதில் உள்ளூராட்சி மன்றங்கள் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் குறிப்பிடப்பட்டது.

யாழ். மாநகரசபை முதல் கட்டமாக தமது எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வீட்டு நாய்களை வளர்ப்பது தொடர்பில் உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கி அதற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அதன் ஆணையாளர் த.ஜெயசீலன் தெரிவித்தார். மேலும் உள்ளூராட்சி மன்றங்களால் பிடிக்கப்படும் நாய்களை, நாய் சரணாலயங்களில் விடுவது தொடர்பில் ஆராயப்பட்டது. சரணாலயங்கள் ஆரம்பிக்கப்பட்டாலும் அவை தொடர்ந்து இயங்கவில்லை என்று கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, பெண் நாய் 25 குட்டிகளையாவது பெறும். அதன் பின்னரே உயிரிழக்கும். நாய்களை சரணாலயத்தில் விடுவதன் ஊடாக கட்டுப்படுத்தமுடியாது. அவை தமது சமநிலையைப் பேணிக்கொண்டேயிருக்கும். கருத்தடை ஊடாகவே இதனைக் கட்டுப்படுத்தமுடியும். வளர்ப்பு நாய்களுக்கு பட்டிகள் வழங்கி வீடுகளில் கட்டி வளர்ப்பதைக் கட்டாயமாக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் ஆராய்ந்து தீர்மானம் எடுப்பதற்காக இறுதியில் 5 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. (ஓ-5)

## மீண்டும் இயங்க முயற்சித்த நொதேர்ண் பவர் நிறுவனம்!

யாழ்ப்பாணம், ஜூன் 1

சுன்னாகம் நிலத்தடி நீர் மாசடைவதற்கு காரணமான நொதேர்ண் பவர் நிறுவனம் யாழ்ப்பாணத்தில் மீளச் செயற்படுவதற்கு முயற்சிகள் மேற்கொண்டமை உண்மையே என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்றுத் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுன்னாகம் நிலத்தடி நீரில் கழிவு ஒயில் கலந்தமையால் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பில் ஆராயப்பட்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சுன்னாகத்தில் நிலத்தடி நீரில் கழிவு ஒயில் கலந்தமையால் பாதிக்கப்பட்ட ஆயிரத்து 372 பேருக்கு இழப்பீடு வழங்க நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. பாதிக்கப்பட்ட மக்களின் கிணறுகளை இறைப்பதற்கு 20 மில்லியன் ரூபா இழப்பீடாக நொதேர்ண் பவர் நிறுவனத்தால் வழங்கப்பட்டிருந்தது. அந்தப் பகுதி மக்கள் அதனை இழப்பீடாகப் பெற்றுக்கொள்வதற்கு தயக்கம்காட்டினர். இழப்பீட்டைப் பெற்றுக்கொண்டால் மீண்டும் நொதேர்ண் பவர் நிறுவனம் அங்கு செயற்படத் தொடங்கும் என்று அவர்கள் அச்சம் வெளியிட்டனர். இறுதியில் உதவித் தொகை என்று குறிப்பிட்டே அந்த மக்களுக்கு வழங்கினோம். அவர்களது கிணற்று நீரைப் பரிசோதிப்பதற்கு கட்டணம் செலுத்தி செய்யமுடியும் என்று தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை குறிப்பிட்டுள்ளது. அந்த மக்கள் தமது கிணற்று நீரையே இப்போதும் அருந்துகின்றனர். நொதேர்ண் பவர் நிறுவனம் மீளச் செயற்படுமா? என்பது தொடர்பில் உத்தரவாதம் கேட்கின்றனர் என்று உடுவில் பிரதேச செயலர் குறிப்பிட்டார்.

இதற்கு கருத்துரைத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அந்த நிறுவனம் மீள இயங்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டது. ஆனால், அதற்கு அனுமதிக்கவில்லை. ஒருபோதும் அவர்களுக்கான அனுமதி வழங்கப்படாது - என்று தெரிவித்தார். (ஓ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதவாதத்தைத் தூண்டிவிட்டு மீளெழுச்சி பெறவே முயற்சி!

## சுதந்திரக் கட்சி சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஜூன் 1**

**இனத்துக்கு அச்சுறுத்தல், மதத்துக்கு அச்சுறுத்தல் எனக் கூறிக்கொண்டு மதவாதத்தைத் தூண்டிவிட்டு, அரசியலில் வீழ்ச்சியுற்றவர்கள் மீண்டெழுவதற்கு முயற்சிக்கின்றனர். அவ்வாறானவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது: நபரொருவருக்கு தாம் விரும்பும் மதத்தைப் பின்பற்றும் உரிமை உள்ளது.

இது அரசமைப்பிலுள்ள ஏற்பாடு. அந்த உரிமையைப் பயன்படுத்தி மற்றைய மதங்களைத் தாக்கக்கூடாது. ஆனால் சில காரணிகளை அடிப்படையாகக் கொண்டு தாம் கடைப்பிடிக்கும் மதமே சிறந்தது என பரப்புரைகள் முன்னெடுக்கப்படுவதாலேயே மத அடிப்படைவாத பிரச்சினைகள் உருவாகின்றன.

மத அடிப்படைவாதம் ஊடாக தமது கட்சிகளைப் பலப்படுத்திக் கொள்வதற்கும், சரிந்துள்ள தமது செல்வாக்கை கட்டியெழுப்பிக் கொள்வதற்கும் அரசியலில் வீழ்ச்சியுற்றோர் திரை மறைவில் முயற்சிக்கின்றனர்.

இனத்துக்கு அச்சுறுத்தல், மதத்துக்கு அச்சுறுத்தல் எனக் கூறிக்கொண்டு மதவாதத்தைத் தூண்ட முயற்சிக்கப்பட்டால் கடும் தண்டனை வழங்கப்பட வேண்டும் - என்றார். (ச-44)

## ஹெரோய்ன் நுகர்வு: இருவர் கைதாகினர்

யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ்ப்பாணம் பிரதான பேருந்துத் தரிப்பிடத்துக்கு அருகிலுள்ள பற்றைக்குள் இருந்து ஹெரோய்ன் மற்றும் ஐஸ் போதைப்பொருள்களை நுகர முற்பட்ட இரண்டு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அந்தப் பகுதிக்குள் போதைப்பொருள்கள் நுகரப்படுகின்றன என்று பொலிஸாருக்கு வழங்கப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமையவே சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதானவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் 25 மற்றும் 29 வயதுடையவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(ம-26)




## யாழ். நூலக எரிப்பின் நினைவு கடைப்பிடிப்பு

வவுனியா, ஜூன் 1

யாழ்ப்பாணப் பொதுநூலகம் எரிக்கப்பட்ட 42ஆவது ஆண்டு நினைவுநாள் நிகழ்வு, காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளால் வவுனியாவில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

காணாமலாக்கப்பட்டவர்களுக்காக வவுனியாவில் தொடர் போராட்டம் இடம்பெற்றுவரும், வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு முன்பாகவுள்ள கொட்டகையிலேயே இந்த நினைவு நாள் நிகழ்வு கடைப்பிடிக்கப்பட்டது.

'யாழ்ப்பாணப் பொதுநூலக எரிப்பு, தமிழின அழிப்பின் ஒரு வடிவமே' என்று போராட்டத்தில் ஈடுபடும் உறவுகள் தெரிவித்தனர். (ம-110)

## ஓகஸ்ட் மாதத்தில் உயர்தரப் பெறுபேறு

கொழும்பு, ஜூன் 1

2022ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் வெளியிடப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளின் தாமதம் நிவர்த்திக்கப்பட்டு, தற்போது அந்தப் பணிகள் வெற்றிகரமாக இடம்பெறுகின்றன. விஞ்ஞான பாடங்களின் விடைத்தாள் மதிப்பீடு ஜூன் மாத நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்படும்.

விடைத்தாள்களை மதிப்பிடுவதற்கு வழங்கப்படும் கொடுப்பனவை அதிகரிக்குமாறு திறைசேரியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது - என்றார். (ச-இ)

## இறக்குமதிப் பழங்களில் உலோகப் பரிசோதனை!

### இம்மாதம் முதல் நடைமுறை

கொழும்பு, ஜூன் 1

நாட்டில் இறக்குமதி செய்யப்படும் பழங்களில் இருக்கும் உலோகப் பதார்த்தங்களின் அளவுகளைப் பரிசோதிப்பது இன்றுமுதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் சில பழங்கள், கருவாடு மற்றும் நெத்தலி போன்றவற்றில் அதிகளவான உலோகங்கள் மற்றும் ஈயம் உள்ளமை கடந்த காலங்களில் கண்டறியப்பட்டது.

2021ஆம் ஆண்டு முதல் 2022ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் சுகாதார அமைச்சின் உணவுப் பாதுகாப்புப் பிரிவு மேற்கொண்ட ஆய்வில் இந்த விடயம் தெரியவந்தது.

இதையடுத்தே இறக்குமதி செய்யப்படும் பழங்கள் மற்றும் சில உணவுப் பொருள்களில் உலோகப் பொருள்கள் உள்ளமை தொடர்பில் இன்றுமுதல் பரிசோதிக்கப்படவுள்ளது. (ச)




**சிலரைப் பார்க்க காமெடிப் பீஸ்கள் மாதிரித் தெரிஞ்சாலும் அவை செய்யிற வேலையள் சிலவேளை கடுமையா இருக்கும். அப்பிடித்தான் யாழ்ப்பாணச் சனத்துக்கு காமெடிப் பீஸா தெரிஞ்ச ஒரு பிரைவேட் டாக்குத்தர் நேற்று 'வாய்வளம்' சரியில்லாததால கம்பி எண்ணியிருக்கிறார். கொஞ்சக் காலத்துக்கு முதல் தன்ர பிரைவேட் ஆஸ்பத்திரிக்கு முன்னுக்கு கட்டியிருக்கிற தண்ணித்தொட்டி, வயல், ஒப்பீஸ் அறை எண்டு எல்லா இடத்திலையும் 'மிமிக்ரி', பாட்டு எல்லாம் செய்து யூரிப்பில போட்டு, மொக்கை வாங்கின டாக்குத்தரை யாழ்ப்பாணக்காரருக்குத் தெரியாமல் இருக்காது. அவருக்கு எப்பவும் தானும் தன்ர ஆஸ்பத்திரியும் வெளிநாட்டில இருக்கிற நினைப்பு. அதாலதான் ஆஸ்பத்திரிக்கும் வெளிநாடொண்டின்ர மாகாணத்தின்ர பேரை வைச்சு, அந்தப் பெரிய நாட்டின்ர கொடியையும் பறக்க விட்டவர்.**

**இப்பிடி 'வெள்ளைக்கார' நாட்டின்ர கொடியைப் பறக்க விட்டவர் நேற்று மானிப்பாயில உள்ள வங்கிக்கு தன்ர 'லாண்ட் க்ரூஸர்' வாகனத்தில பறந்து போயிருக்கிறார். வாகனத்தைப் 'பார்க்' பண்ணிப்போட்டு, திரும்ப எடுக்கேக்க பின்னால ஒரு பொம்பிளையின்ர மோட்டர் சைக்கிள் முட்டி, அப்பிடியே விழுந்து போச்சு. சரி, மனிதாபிமானத்தோட அந்த மோட்டர் சைக்கிளை நிமிர்த்திவிட இந்தக் காமெடி டாக்குத்தர் உதவி செய்திருக்கலாம். அதுவும் செய்யேலை. ஆனால் 'இப்பிடியே கண்ணை மூடிக்கொண்டு மோட்டர் சைக்கிளை கொண்டந்து விடுறது?' எண்டு வாய்க்கு வந்தபடி கேக்க, பக்கத்தில இதைப் பார்த்துக் கொண்டிருந்த பொலிஸ்காரர் கிட்ட வந்து 'ஏன் இப்பிடிப் பேசுறீங்கள். முறைப்படி நீங்கள் அவாவின்ர பைக்கை தூக்க உதவி செய்திருக்க வேணும்' எண்டு நோர்மலா அறிவுரை சொல்ல, டாக்குத்தருக்கு முகமெல்லாம் சிவந்து விஜயகாந்த் மாதிரி கையெல்லாம் முறுக்கேறி கோபம் வந்திட்டு.**

**நியாயம் கேக்க வந்த பொலிஸ்காரருக்கு தூசணத்தால சணல் பறந்த பேச்சுக் குடுத்திருக்கிறார் டாக்குத்தர். தன்னட்ட வாற நோயாளியளுக்கு எப்பவும் 'ஓவர் டோஸ்' குடுத்த பழக்கத்திலையோ என்னவோ அந்தப் பொலிஸ்காரருக்கும் ஓவரா 'டோஸ்' குடுக்க நினைக்க, அவரின்ர வாயெல்லாம் குளற வெளிக்கிட்டுருக்கு. உடனேயே பொலிஸ்காரர் அவரை 'பலூன் ஊதக்' குடுத்திருக்கிறார். (இது சின்னப்பிள்ளையள் ஊதி விளையாடுற பலூன் இல்லை, பெரியாக்கள் குடிச்சிருக்கினமோ இல்லையோ எண்டு கண்டு பிடிக்கிற பலூன்) தண்ணியடிச்சிட்டு 'பாலன்' மாதிரி இருந்தவரை பலூன் காட்டிக்குடுத்திட்டுது. பிறகென்ன, ஆள் இப்ப , தண்ணியில வாகன மோடினதுக்காக உள்ளுக்க போட்டார். அந்த பைக் முட்டுப்படேக்க வாயைப் பேசாமல் வைச்சிருந்தால் இப்பிடி நடக்குமோ? நுணலும் தன் வாயால் கெடுமெண்டு சும்மாவோ சொன்னவை?**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









கர்மாரம்பம்
26.05.2023
வெள்ளிக்கிழமை

திருச்சிற்றம்
இயமன் தூதரும் அஞ்சுவ
நயம் வந்து ஓத வல்லார்
நியமம் தான் நினைவார்
நயனன் நாமம் நமச்சிவ
திருச்சிற்றம்பலம் (நமச்சி

முல்லை / ஒ

# திருவருள் மிகு பூலோகநாயகி உடனா (தான்தோன்றீஸ்வரர் தே

## முல்லை/ஒட்டுசுட்டான் திருவருள் மிகு தான்தோன்றீஸ்வரர்
## ராஜகோபுர நிர்மாணித உத்தமோத்தம பக்ஷ ஸப்த தச (17) குண்ட சகித அ

சிவன் அன்பிற்கு பாத்திரமான சிவப்பிரியர்களே!

மகேந்திரபுரி ஸ்வர்ணபுரி ராவணேஸ்வரம் என புராண இதிகாசங்களிலே புகழப்பட்டதும் இந்துமா கடலின் மத்தியிலே இருக்கின்றதும் மாம்பழ வடிவாகியதும் இயற்கை அழகுடன் கூடியதுமாகிய லங்கா தீப கற்பத்தின் வடபால் இயற்கை வளங்களும் ஆறுகளும் குளங்களும் வற்றாத நீரூற்றுக்களை தன்னகத்தே கொண்டதும் வந்தாரை வரவேற்று விருந்தோம்பும் பாங்கும் அடங்கப்பற்றின் இறுதி மன்னன் மாவீரன் பண்டாரவன்னியன் நல்லாட்சி புரிந்த முல்லை மாநகரின் மேற்கே 15வது மைல்கல் தூரத்தில் ஒட்டுக்களை சுட்டதனால் ஒட்டுசுட்டான் என்கின்ற காரணப் பெயரையும் கிழக்கே பிராமண குளமும் தெற்கே குடிதாங்கியார் குளமும் மேற்கே விடத்தல் குளமும் வடக்கே காக்கைப்பணிக்கன் குளமும் இயற்கை நீரூற்றுக்களாக அமைய பாலாறும் தயிராறும் பெருகி வழிந்தோட வேண்டுவார்க்கு வேண்டுவதை ஈந்தாளும் ஒட்டுக்களைச் சுட்டும் வேகாமல் வனத்திடை சுயம்புருவாகி வந்துதித்து பூலோகத்திலே உற்பத்தியாகிய காரணத்தினால் பூலோக நாயகியின் மணாளனாகவும் ஒட்டுகளைச் சுட்டும் வேகாத காரணத்தினால் வேகாவனனேஸ்வரர் (தான்தோன்றீஸ்வரர்) என்கின்ற திருநாமம் பூண்ட சுயம்புலிங்கப் பெருமானுக்கு நிகழும் மாட்சிமை தங்கிய சோபகிருது வருடம் உத்தராயண புண்ணிய காலம் இளவேனிற்காலம் வைகாசி மாதம் 18ம் நாள் (01.06.2023) வியாழக்கிழமை பூர்வ பட்ச துவாதசித் திதியும் சுவாதி நட்சத்திரமும் அமிர்த யோகமும் கூடிய முற்பகல் 11.10 முதல் 12.00 மணிவரையுள்ள சந்திரஹோரையுடன் கூடிய சிம்ம லக்கின சுப நன்நாளிலே சுயம்பு லிங்கப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் நவதள ராஜகோபுரத்திற்கும் மஹாகும்பாபிஷேகப் பெருவிழா இடம்பெற திருவருள் வியாபித்துள்ளது. எனவே அடியவர்கள் அனைவரும் ஆசாரசீலர்களாக எமது கலாச்சாரத்தை பேணிப்பாதுகாத்து ஆலயத்திற்கு வருகை தந்து நடைபெறுகின்ற இறைவழிபாடு கிரிகைகளில் கலந்து சுபீட்சமாக பேரானந்தப் பெருவாழ்வு வாழ வேண்டுகிறோம்.

### வைகாசித்திங்கள் 15நாள் (29.05.2023) திங்கட்கிழமை

காலை 7.00மணி முதல் வேத திருமுறை பாராயணம், ஏகதந்தர்வழிபாடு, வர்ணபூஜை, விஷேஷசந்தி, சிவோவூபாவனை, தர்மத்வஜஆராதனை, மஹமந்திர பிரவேசனம், பரிவாரயாக பூஜை ஹோமவழிபாடுகள், பிரதான யாகபூஜை, ஸ்தாலிபாகம், காயத்ரி, மூலமந்திரஹோம வழிபாடுகள், பூர்ணாகுதிகள்.பிரதக்ஷிண நமஸ்கார சர்வாஞ்சலி சமர்ப்பணம், சிவபுராண பாராயணம், பிரசாதம் வழங்கல்.

**குறிப்பு:- 25.03.2023, 29.05.203, திங்கட்கிழமை - 30.05.2023, செவ்வாய்க்கிழமை 31.05.2023 புதன்கிழமை ஆகிய மூன்று நாட்களும் எண்ணெய்க்காப்பு இடம்பெறும்**

மாலை 4.00மணிமுதல் வேத திருமுறை பாராயணம், ஹேரம்பகணபதி, ஹர்ஷிணி நாயகர் பூஜை வழிபாடுகள், சிவோஹபாவனை, தர்மத்வஜவழிபாடு, மஹாயாகாதி சகல யாகசாலை பிரவேசனங்கள், யாகபூஜைகள், ஆகுதிவழிபாடுகள், பிரதக்ஷண நமஸ்கார ஸர்வாஞ்சலி சமர்ப்பணம், சிவபுராணபடனம், பிரசாதம் வழங்கல்.

### வைகாசித்திங்கள் 16ம் நாள் (30.05.2023) செவ்வாய்க்கிழமை

காலை 7.00 மணிமுதல் வேத திருமுறை பாராயணம், பாலகணபதி வருண ஆவாஹனம், சகளீகரணம், பூதசுத்தி, சிவோஹபாவனை தர்மத்வஜ பூஜை மஹாயாகாதி பரிவாரயாகாலய பிரவேசனங்கள் யாகபூஜைகள், பாவனாபிஷேகம், காயத்திரி, மூலமந்திர ஸஹித ஹோமவழிபாடுகள், பரிவார மூர்த்திகள் சர்வாஞ்சலி சமர்ப்பணம், மஹாராஜாக ஹோம வழிபாடுகள் பிரதக்ஷண நமஸ்கார சர்வாஞ்சலி சமர்ப்பணம் சிவபுராண பாராயணம், பிரசாதம் வழங்கல். மாலை 4.00 மணி முதல் எழுதாமறை திராவிடபாராயணம், மூஷிகவாகனர், மகரவாகனர் ஆராதனை சகளீகரணம், அந்தர்யாகம், தர்மத்வஜ வழிபாடு யாகலய பிரவேச னங்கள் யாக பூஜைகள் மகாமந்திர ஹோமவழிபாடுகள் பிரதர்க்ஷன நம்ஸ்கார சர்வாஞ்சலி சமர்ப்பணம் சிவபுராண பாராயனம். பிரசாதம் வழங்கல்.

### வைகாசித்திங்கள் 17ம் நாள் (31.05.2023)புதன்கிழமை

காலை 7.00 மணி முதல்-ஸ்ருதி தேவாராதி பாராயணம், பக்தி கணபதி வருண பூஜை, சகளீகரணம், சிவோஹபாவனை, விம்பசுத்தி கும்ப பூஜை ஜெபஹோமம், தர்மவஜ்ஆராதனை, யாகசாலை பிரவேசனங்கள், யாக பூஜைகள், விஷேடதிரவிய ஹோமங்கள், பிரதக்ஷின நமஸ்கார சர்வாஞ்சலி சமர்ப்பணம், சிவபுராண பாராயணம், பிரசாதம் வழங்கல்.

மாலை 4.00 மணி முதல் (குறிப்பு 31.05.2023 புதன்கிழமை மதியம் 12.30 மணியுடன் எண்ணெய்க்காப்பு நிறைவுறும்). வேத திராவிட பாராயணம் கபிலகணபதி, பச்சிமாதிபர் பூஜை, சகளீகரணம், சிவசொரூப பாவனை விம்பசுத்தி கும்ப பூஜை, ஜெபஹோமவழிபாடு சமர்ப்பணம், தர்மத்வஜ உபாசனை, யாகசாலை பிரவேசனங்கள், மூலாலய துவார பூஜை விம்பசுத்தி விம்பரட்ஷாபந்தனம் பூர்வ சந்தானம் (நியாசங்கள்) யாகபூஜைகள், ஹோமங்கள் பரிவாரமூர்த்திகள் பச்சிம சந்தானம் (ஸ்பர்சாகுதி) பூர்ணாகுதிகள், பிரதக்ஷிண நமஸ்கார சர்வாஞ்சலி சமர்ப்பணம், சிவபுராண பராயணம், குருமார் உபசாரம், பிரசாதம் வழங்கல்.

### வைகாசித்திங்கள் - 18ம் நாள் (01.06.2023) வியாழக்கிழமை

அதிகாலை 4.00 மணி முதல் வேத்திராவிடபாராயணம், விக்னேஸ்வரர் பூஜை வருணதேவர் பூஜை சகளீகரணாதி சிவோஹபாவனை தர்மத்வஜ வழிபாடு யாகாலய பிரவேசனங்கள் யாகபூஜைகள், பரிவாரயாக மஹாபூர்ணாகுதிகள் மஹாயாக ஹோம வழிபாடுகள் மஹாயாக பச்சிமசந் தானம் (ஸ்பர்சாகுதி) மஹாபூர்ணாகுதிகள் தீபாராதனை பிரதக்ஷிண நம்ஸ்கார புஷ்பாஞ்சலி மஹாஆரார்த்தி வேத ஸ்தோத்திர, ராக, தாள, திராவிடபாராயண சமர்ப்பணம், நாட்டியாஞ்சலி சமர்ப்பணம், ஆசீர்வாதம், அந்தர்பலி, பஹிர்பலி, யாத்ராதானம், சர்வமங்கள வேத திராவிட கோஷசஹித மங்களவாத்தியங்கள் முழங்க கும்ப உத்தாபனங்கள், பஹிராவர்த்தி (வெளிவீதியுலா) ஆலய பிரவேசனம் உள்வீதியுலா.

முற்பகல் 11.10 முதல் 12.00 மணிக்கிடையில் உள்ள சந்திரஹோரையுடன் கூடிய சிம்மலக்ன சுபமுகூர்த்த நன்னேரத்தில் நவதளராஜகோபுரம், ஸ்தாபிகள் அபிஷேகம், மஹாகும்பாபிஷேகம், பரிவாரமூர்த்திகள், கும்பாபிஷேகம் மஹோஹவிர் நிவேதனம், மங்கள ஆராத்தி, திருக் கதவடைத்தல், குப்தபூஜை, தசமங்கள் தசதர்சனம், ஸ்திராகுதி, மூர்த்திபர்கள்ரக்ஷா விசர்ஜனம், எஜமானபிஷேகம், கர்ப்பாவரணம், ஆசீர்வாதம், ஆசியுரைகள் இடம்பெற்று மங்கள நிறைவு மாலை மஹா அபிஷேகம் இடம் பெறும். தொடர்ந்து ஏகபக்ஷம் (15 தினங்கள்) மண்டலாபிஷேகம் இடம்பெறும். மஹா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து அன்னதானம் (மகேஸ்வரபூஜை) இடம்பெறும்.

வைகாசி தி
அதிகாலை 5
பத்திரிகா பட
வேத திருமுறை
காலை 7.00 ம
பராயணம், பிர
சிவபுராண பார
காலை 7.00 ம
சிவபுராணபடன
பிற்பகல் 2.30
கலாஹர்ஷண
வழிபாடுகள், ம
குறிப்பு:- 28.0

இராஜகோபுர வர்ண வேலை
செல்வதாஸ் குழுவினர்
(யாழ்ப்பாணம்)

குறிப்பு:- தொடர்ந்து 15 தினங்கள் மண்டலாபிஷேகம் இடம் பெறும். மண்டலாபிஷேக
ஹுவாறு அன்புடன் வேண்டுகிறோம். 15 தினங்கள் மண்டலாபிஷேகமும் 16ம் நாள்
இடம் பெற்று மும்மூர்த்திகள் உள்வீதி

ஆலய வர்ண வேலைக்கான அனைத்து வர்ணங்களும் ஞானம் பெயின்ட்ஸ் இனால் வழங்கப்பட்டது என்பன
தெரிவித்துக்கொள்வதோடு மஹா கும்பாபிஷேக நிகழ்வு சிறப்பாக நடைபெற வாழ்த்துகின்றே

Gnanam Paints
http://www.gnanampaints.com/
இல.558, மானிப்பாய் வீதி,
ஒட்டுமடம், யாழ்ப்பாணம்.
+94 776 184 691
+94 212 225 577

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# தீ விழுங்கிய தீந்தமிழ்!

யாழ்ப்பாணப் பொதுநூலகம் பேரினவாதப் பூதங்களால் தீக்கிரையாக்கப்பட்டு இன்றுடன் 42 ஆண்டுகள் ஓடிமறைகின்றன. யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திலிருந்து சில மீற்றர்கள் தூரத்தில் இருந்த நூலகத்தின் மீது 1981ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி பின்னிரவில் நடத்தப்பட்ட இந்த கடைநிலைத் தாக்குதல் தமிழர்களின் மனங்களில் இடியாய் இறங்கியது, இன்றளவும் அது ஆறாத ரணமாகத்தான் இருக்கின்றது. யாழ். நூலகம் என்பது அப்போது வெறும் கட்டடமாக மக்களிடம் நிலைபெற்றிருக்கவில்லை. யாழ்ப்பாணத்து மக்களின் ஆன்மாவாகவே அது அடையாளப்படுத்தப்பட்டிருந்தது. தங்கள் பிள்ளைகளின் அறிவுப்புலமாக விளங்கிய யாழ். நூலகத்துக்கு நன்றி செலுத்தும் வகையில் பல குடும்பங்கள், நூலக முன்புறத்தில் இருந்த சரஸ்வதி சிலைக்குப் பொங்கலிட்டு படையல் செய்த சம்பவங்களும் நிகழ்ந்திருந்தன.

ஓர் இனத்தை அழிக்க வேண்டுமாயின் முதலில் அந்த இனத்தின் அறிவை அழிக்கவேண்டும். எனவே தமிழர்களின் அறிவுக்கருவூலமாக 1800ஆம் ஆண்டுகளில் எழுதப்பட்ட ஓலைச்சுவடிகள், வரலாற்றுச் சான்றுகள் உள்ளிட்ட 97 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விலைமதிக்க முடியாத நூல்களோடு, தெற்காசியாவில் சிறந்த நூலகமாக விளங்கிய யாழ்.பொது நூலகத்தை எரிப்பதனூடாக தமிழர்களின் ஆன்மாவை நிலைகுலைய வைக்கலாம் எனப் பேரினவாதிகள் கருதினர். அதனால் அவர்களின் கண்ணை உறுத்திக் கொண்டிருந்த நூலகத்துக்குப் பேரின வானரங்கள் ஜூன் முதலாம் திகதி பின்னிரவு தீயிட்டன. ஜூன் 2ஆம் திகதிவரை நூலகம், மக்களின் கண்முன்னே எரிந்து சாம்பரானது. அதைத் தாங்கமுடியாமல் தாவீது அடிகளார் உயிர் பிரிந்தார். இத்தோடு தமிழர்களின் கொட்டத்தை அடக்கி விட்டதாகப் பேரின வானரங்கள் இறுமாப்பு அடைந்தன.

ஆனால், அவர்கள் எதிர்பார்த்தமைக்கு மாறாக, நூலகத்தில் எரிந்த தீ, தமிழர்களின் மனங்களுக்குள் புகுந்து அணையாமல் எரியத் தொடங்கிற்று. இந்தத் தீயின் வெம்மை உரிமைக்காக ஆயுதமேந்த இன்னுமின்னுமாக இளைஞர், யுவதிகளை அணிவகுக்க வைத்ததே தவிர அடிபணிய வைக்கவில்லை. மீண்டும் புதிதாக யாழ்.பொது நூலகம் அமைக்கப்பட்டபோதும் கூட, அதன் முன்னைய ஆன்மா இன்னும் அதனிடத்தே இல்லையென்றுதான் சொல்லவேண்டும். அழிந்த நூலகம் அழிந்ததுதான். அது வேறு ஆன்மா, இப்போதைய நூலகத்தின் ஆன்மா வேறு. ஏனெனில் வெறும் கட்டடம்தான் அதே போன்று முன்னரை விடவும் கூடுதல் வசதிகளோடு அமைக்கப்பட்டதே தவிர அதனோடு எரிந்து போன அரிய நூல்களோ, சுவடிகளோ மீண்டெழமுடியாதே? அவை இல்லாமல் எப்படி நூலகத்தின் ஆன்மா திரும்பமுடியும்?

அதனால்தான், இந்த இழிசெயலை சிந்தனையற்ற காடைத்தனத்தை இவ்வாறு பதிவு செய்கின்றார் கவிஞர் எம்.ஏ.நுஃமான்.

'நேற்று என் கனவில்
புத்தர் பெருமான் சுடப்பட்டிறந்தார்.
சிவில் உடை அணிந்த
அரச காவலர்கள் அவரைக் கொன்றனர்.
யாழ். நூலகத்தின் படிக்கட்டருகே
அவரது சடலம் குருதியில் கிடந்தது.
இரவில் இருளில்
அமைச்சர்கள் வந்தனர்.
'எங்கள் பட்டியலில் இவர்பெயர் இல்லை
பின் ஏன் கொன்றீர்?'
என்று சினந்தனர்.
'இல்லை ஐயா!
தவறுகள் எதுவும் நிகழவே இல்லை
இவரைச் சுடாமல்
ஓர் ஈயினைக் கூடச்
சுடமுடியாது போயிற்று எம்மால்
ஆகையினால்......
என்றனர் அவர்கள்.
'சரி! சரி!
உடனே மறையுங்கள் பிணத்தை'
என்று கூறி அமைச்சர்கள் மறைந்தனர்.
சிவில் உடையாளர்
பிணத்தை உள்ளே இழுத்துச் சென்றனர்.
தொண்ணூறாயிரம் புத்தகங்களினால்
புத்தரின் மேனியை மூடி மறைத்தனர்
சிகாலோவாத சூத்திரத்தினைக்
கொளுத்தி எரித்தனர்.
புத்தரின் சடலம் அஸ்தியானது
தம்ம பதமும்தான் சாம்பரானது'

## நாளொரு நல்வார்த்தை

" ஒரு நிமிடம் தாமதமாகச் செல்வதை விட மூன்று மணிநேரம் முன் கூட்டியே செல்வது சிறந்தது"

– வில்லியம் ஷேக்ஸ்பியர்



# அரசின் வேலைத்திட்டத்தை தீவிரமாகப் பரப்புரை செய்க

## ஜனாதிபதி ரணில் அறிவுறுத்து

**கொழும்பு, ஜூன் 1**

**ஜே.வி.பி.யினருக்கு மக்கள் மத்தியில் இருந்த செல்வாக்குக் குறைந்துவிட்டது. ஐக்கிய மக்கள் சக்தியிலும் எழுச்சியில்லை. எனவே, அரசின் வேலைத்திட்டத்தை மக்கள் மத்தியில் தீவிரமாகப் பரப்புரை செய்யுங்கள் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தியுள்ளார்.**

ஜப்பானில் இருந்து நாடு திரும்பிய கையோடு அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், முன்னாள் அமைச்சர்கள் மற்றும் மாவட்ட அமைப்பாளர்களுடன் ஜனாதிபதி சந்திப்பொன்றை நடத்தியுள்ளார். இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதற்குப் பதிலளித்த பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசம், உங்களால் முன்னெடுக்கப்படும் திட்டங்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கப்படும். எதுவாக இருந்தாலும் எமது கட்சிக்கு ஒரு தடவை அறிவித்துவிடுங்கள் எனக் கோரிக்கை விடுத்தார்.

அதன்பின்னர் கருத்து வெளியிட்ட ஜனாதிபதி, நெருக்கடியின்போது எவரும் நாட்டைப் பொறுப்பேற்கவில்லை. நாம் பொறுப்பேற்றோம். மறைப் பெறுமதியில் இருந்த பொருளாதாரம் தற்போது பூச்சிய மட்டத்துக்கு வந்துள்ளது. அடுத்து வரும் மாதங்களில் நேர்ப் பெறுமதியை நோக்கி நகரும். ஆகவே, அரசால் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் பற்றி மக்கள் மத்தியில் தெளிவுபடுத்துங்கள் - என்றார். இந்தக் கூட்டத்தின் அடுத்த சந்திப்பு எதிர்வரும் 7ஆம் திகதி இடம்பெறும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. (ம)

# சீனப் பிரதிநிதிகள் – சஜித் சந்திப்பு!

கொழும்பு, ஜூன் 1

சீனாவின் பிரதிநிதிகளுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்துக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.



சீன மக்கள் குடியரசுக்கும் இலங்கைக்கும் இடையிலான 12 ஆவது சுற்று இராஜதந்திர ஆலோசனைகளுக்கு இணைத் தலைமை வகிப்பதற்கு இலங்கைக்கு வருகை தந்துள்ள சீனாவின் பிரதி வெளிவிவகார அமைச்சர் சன் வெய்டாங் உள்ளிட்ட குழுவினரே, எதிர்க்கட்சித் தலைவரான சஜித்தைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டதோடு, இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குமாறும், உற்பத்தித் தொழில் புரட்சியை அடுத்த கட்டத்துக்கு முன்கொண்டு செல்வதற்குத் தேவையான ஒத்துழைப்பை நல்குமாறும் எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது கோரிக்கை விடுத்தார். (ம-22)

நாளை
02.06.2023
வெள்ளிக்கிழமை
வைகாசி 19

சுபநேரம் : 05.52 – 07.22
ராகுகாலம் : 10.22 – 11.52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரத்தைக் கைப்பற்றவே மத முரண்பாட்டுச் சூழ்ச்சி!

## முழுமையான விசாரணையைக் கோருகிறது கத்தோலிக்கசபை

கொழும்பு, ஜூன் 1

**நாட்டில் மத நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் வகையில் செயற்படும் நபர்களின் பின்னணியில் செயற்படுபவர்கள் மற்றும் குழுக்கள் தொடர்பில் சுயாதீன விசாரணை நடத்தப்பட்டு உண்மை கண்டறியப்பட வேண்டும் என்று கொழும்பு பேராயர் இல்லத்தின் ஊடகப் பேச்சாளரான அருட்தந்தை சிறில் காமினி தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

"மத நம்பிக்கை மற்றும் மதத் தலைவர்களுக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் சமூக வலைத்தளங்களில் பல நபர்களால் கருத்துகள் முன்வைக்கப்பட்டுவரும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இவ்வாறான செயல்களில் ஈடுபட்ட நபர்களில் சிலருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதாக ஊடகங்கள் மூலம் அறியமுடிகின்றது. மத நம்பிக்கை மற்றும் மதத் தலைவர்கள் அவமதிக்கப்படுவதை நாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம். அனைத்து மதங்களையும் மதிக்க வேண்டும். மாறாக மதங்களை அவமதிக்கும் வகையிலான செயற்பாடுகளை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இனவாதம் மற்றும் மதவாத முரண்பாடுகளைத் தோற்றுவித்து, நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்திவிட்டு, அதன்மூலம் அதிகாரத்தை வெல்வதற்கு முற்படும் சில அரசியல்வாதிகள், அவ்வாறான சந்தர்ப்பங்களை உருவாக்குவதற்காக நபர்கள், ஊடகங்கள், சமூக ஊடகங்களைத் திட்டமிட்ட அடிப்படையில் கடந்த காலங்களிலும் பயன்படுத்தி வந்தனர். எனவே, தற்போது எழுந்துள்ள மத முரண்பாடுகூட இவ்வாறான சூழ்ச்சியின் ஓர் அங்கமாக இருக்கக்கூடும். இதன்மூலம் இறுதியில் அதிகாரத்தை வெல்லும் அரசியல்வாதிகள் செல்வங்களைக் குவித்துக்கொண்டு, சுகபோக வாழ்க்கை வாழ்வார்கள். மோதிக்கொள்ளும் சாதாரண மக்களும், நாடும்தான் துன்பத்தை அனுபவிக்க நேரிடும். எனவே, பௌத்த மதம் உள்ளிட்ட இந்த நாட்டில் உள்ள மதங்களுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டார்கள் எனச் சந்தேகிக்கப்படும் நபர்களின் பின்னணியில் உள்ளவர்கள் மற்றும் அமைப்புகள் தொடர்பில் சுயாதீன விசாரணை நடத்தி, உண்மை கண்டறியப்பட வேண்டும். பொலிஸ் மற்றும் சி.ஐ.டியினருக்கு இதற்கான பொறுப்பு உள்ளது" - என்றார். (ம-44)

## உயிரிழந்த சிறுமியின் வீட்டுக்குக் குழாய்க்கிணறு

### மிருசுவில் இளைஞர்கள் முன்மாதிரி

யாழ்ப்பாணம், ஜூன் 1

பாதுகாப்பற்ற கிணற்றில் தவறிவீழ்ந்து உயிரிழந்த சிறுமியின் வீட்டுக்கு அந்தப் பகுதி இளைஞர்கள் இணைந்து ஆழ்துளைக்கிணறு அமைத்துக் கொடுத்துள்ளனர். மிருசுவில் வடக்குப் பகுதியிலுள்ள வீடொன்றில் பாதுகாப்பற்ற கிணற்றில் தவறி வீழ்ந்து 6 வயதுச் சிறுமி கடந்த சனிக்கிழமை உயிரிழந்திருந்தார்.

இந்தநிலையில் அந்தக் கிராமத்தின் இளைஞர்கள் ஒன்றுகூடி பொதுமக்களிடம் நிதிதிரட்டி குறித்த வீட்டுக்குப் பாதுகாப்பான முறையில் குழாய்க்கிணறு அமைத்துக் கொடுத்துள்ளனர். பாதுகாப்பற்ற கிணற்றை இடித்து மண்ணிரப்பி மூடியுள்ளனர். குறித்த இளைஞர்களின் இந்த முன்மாதிரியான சிறந்த செயற்பாட்டைப் பலரும் பாராட்டியுள்ளனர். (ச)



## ஆசிரிய கலாசாலையில் சேவைநலன் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 1

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளராகவும் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் விரிவுரையாளராகவும் சேவையாற்றி ஓய்வு பெறும் சரா.புவனேஸ்வரனைக் கௌரவிக்கும் நிகழ்வு கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் வாழ்த்துரைகளை கலாசாலை விரிவுரையாளர் க.அன்பரசி மற்றும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் புதிய பொதுச் செயலாளர் சி.கணேசலிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து கலாசாலைச் சமூகத்தின் சார்பில் மணிவிழா நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது. (ச)

## தோமையார் முன்பள்ளியில் திறன் வெளிப்பாட்டு நிகழ்வு!

யாழ்ப்பாணம், ஜூன் 1

மாதகல் புனித தோமையார் முன்பள்ளியின் திறன் வெளிப்பாட்டு நிகழ்வு இன்று வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு புனித தோமையார் ஆலய முன்றிலில் இடம்பெறவுள்ளது.

மாதகல் பங்குத்தந்தை அருட்தந்தை செ.றோய் பேடினன் அடிகளார் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. நிகழ்வில் வடக்கு மாகாண ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் லோ.ஸ்ரனிஸ்லாஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ச-66)

## மன். ஓட்டோச் சங்கத்தின் தலைவர் மீது தாக்குதல்

மன்னார், ஜூன் 1

மன்னார் மாவட்ட முச்சக்கரவண்டிச் சங்கத்தின் தலைவர் மீது நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை குழுவொன்று தாக்குதல் நடத்தியதில், பலத்த காயமடைந்த நிலையில் அவர் மன்னார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சுப்பிரமணியம் சுவதீசன் (வயது - 44) என்பவரே தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார். இது தொடர்பில் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-56)

# மாணவ சமூகத்தின் மாண்பாளர் சரா.புவனேஸ்வரன்

கல்விக்காகத் தன்னை அர்ப்பணித்த ஆசிரியர் சரா.புவனேஸ்வரன், கற்பித்தல் உலகிலிருந்து விடைபெறுவது யாவருக்கும் ஒரு துயரமான செய்தியே.

கிழக்கிலங்கையின் திருகோணமலை மாவட்டம் மூதூர் பிரிவின் சம்பூரணமான தனித்தமிழர்கள் வாழும் சம்பூர் கிராமத்தில் தமிழரின் உரிமைக்கான போராட்டங்கள் ஆரம்பமாவதற்கு முன்னர் இருபது ஆண்டுகள் கிராம சபையின் தலைவராக இருந்து பல்வேறு சமூகப்பணிகளைச் செய்து மக்களுக்காக தன்னை அர்ப்பணித்து கல்வி, விவசாயம் போன்றவற்றில் வரலாற்றுத் தடங்களைப் பதித்த வடமராட்சி மண்ணின் புதல்வரான அமரர் நா.சி.சரவணமுத்துவின் ஒன்பதாவது ஆண்மகனாகப் பிறந்தவரே சரா.புவனேஸ்வரன். தந்தையைப் போல மண் பற்றும், மக்கள் சேவையும் உரித்தாகக் கொண்டவராக வளர்ந்தவர்.

கல்வியிலும், விளையாட்டிலும் மிகுந்த ஆர்வமுள்ளவராக இருந்து உயர்தரம் கற்கும் காலத்தில் விடுதலைப்போராட்டம் ஆரம்பமாகி அதனால் பல குடும்ப உறுப்பினர்களை இழந்து, தளராத மன உறுதியோடு 1988 ஆம் ஆண்டு ஆசிரியத் தொழிலை விரும்பி ஏற்றுக் கொண்டார். அரியாலை கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தமது பணியை ஆரம்பித்தார்.

அப்போது அவருக்குக் கிடைத்த மாதாந்த வேதனம் ஆயிரத்து 440 ரூபா மட்டுமே. அதில் நானூற்று நாற்பது ரூபாவை மாணவர்களின் நலனுக்காகச் செலவுசெய்தார். பின்னர் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பயிற்சிபெற்றார்.

அக்காலத்தில் விளையாட்டுத் துறையில் 100 மீற்றர் ஓட்ட போட்டியில் புதிய சாதனை படைத்தார். விளையாட்டுத்துறை மட்டுமன்றி நாடகத்துறையிலும் சிறந்து விளங்கினார். அமரர் கலாநிதி காரை சுந்தரம்பிள்ளையின் 'மூவிராசாக்கள்' என்னும் நாட்டிய நாடகத்தில் விசேட கதாபாத்திரத்திலும், அமரர் மெற்றாஸ் மெயிலின் 'வேளம்பெடுத்த வீராங்கனை' எனும் நாட்டிய நாடகத்தில் கட்டியக்காரனாகவும் நடித்து பல ரசிகர்களின் மனங்களை வென்றவர்.

பல்துறை விளையாட்டு வீரரான இவர் கரப்பந்தாட்டத்தில் விசேட தேர்ச்சி பெற்ற ஆட்டக்காரனாகவும் பயிற்றுவிப்பாளராகவும் விளங்கியவர். இவரின் விளையாட்டுத்துறைத் திறமைகளை அறிந்த யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் அப்போதைய அதிபர் அமரர் கவிஞர் நாக.சண்முகநாதபிள்ளை, இவரை மத்திய கல்லூரியின் விளையாட்டுத்துறை ஆசிரியராகப் பெற்றுக் கொண்டார்.



நல்ல கண்டிப்பான கருணை உள்ளம் கொண்ட ஆசிரியராக, உதவிசெய்யும் உத்தம மனிதராக, எல்லோரையும் சமமாக மதிக்கும் பண்பாளனாக மண்ணின் மீதும் மக்களின் மீதும் தமிழ்க் குழந்தைகள்மீதும் அளப்பரிய பற்றுதல்கொண்ட உயரிய மனிதனாக சரா.புவனேஸ்வரனை எப்பொழுதும் அவதானித்திருக்கின்றோம். ஓய்வே இல்லாமல் இளைஞனாக என்றும் ஆற்றிய பணிகளைத் தொடர அன்பு மாணவர்களாக வாழ்த்துகின்றோம்.

மாணவர்கள்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வடமாகாணத்தில்

# கண்களைப் பாதிக்கும் உக்கிரமான வெப்பம்!

## சுகாதாரத்துறை எச்சரிக்கை



**கொழும்பு, ஜூன் 1**

**நாட்டில் தற்போது நிலவும் கடும் வெப்பமான காலநிலையால் கண்கள் மற்றும் சிறுநீரகங்களில் பாதிப்பு ஏற்படலாம். வெப்பத்திலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள மக்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என சுகாதாரத்துறை அறிவுறுத்தியுள்ளது.**

இதுதொடர்பில் சுகாதாரத்துறை தெரிவித்ததாவது:

வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் வெப்பம் உச்சமடைந்துள்ளது என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது. அதிக சூரிய ஒளியுடன் உடலில் தீங்கு விளைவிக்கும் கதிர்கள் விழுவதால் கண்கள் பாதிப்புக்குள்ளாகும் அபாயநிலை காணப்படுகின்றது. கடும் வெப்பம் காரணமாக கண்கள் மாத்திரமின்றி சிறுநீரகங்களும் பாதிப்புறும் சாத்தியம் உள்ளது. வெயிலின் உக்கிரத்திலிருந்து தப்பிக்க பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படவேண்டும். வெளியில் செல்பவர்கள் வெளிர் நிற ஆடைகளை அணிவது சிறந்தது. அத்துடன் தினமும் இரண்டு லீற்றருக்கும் அதிகமான நீரைப் பருகி நீரிழப்பை தவிர்க்க வேண்டும் - என்றுள்ளது. (ச-இ)

# கட்டுப்பாட்டில் டெங்குத் தொற்று

யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ். மாவட்டத்தில் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு டெங்கின் தாக்கம் குறைவாகவுள்ளதாக யாழ். மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் ஜனவரி மாதத்தில் அதிகமான டெங்கு நோய்த் தாக்கம் இருந்தாலும் பின்னர் படிப்படியாகக் குறைவடைந்துள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைவாகவுள்ளது. டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் சகல இடங்களிலும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டன. டெங்கு பரவல் தீவிரமான சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு அடையாளப்படுத்தப்பட்டு அதனுள் கிராம அலுவலர் பிரிவு கண்டறியப்பட்டு அங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தீவிரமாக நடைமுறைப்படுத்தப்பட்டன.

டெங்குத் தாக்கத்தால் இதுவரை ஒரு இறப்பு மாத்திரம் யாழ். மாவட்டத்தில் பதிவாகியுள்ளது. அதுவும் நீர்கொழும்பைச் சேர்ந்த பெண் சிப்பாய் ஒருவரே உயிரிழந்துள்ளார் - என்றார். (ஓ-5)


விற்பனைக்கு

ஆர்பிக்கோ - குஷன் செற் உட்பட வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்கு.

(CS/50627) AH-1

077 993 5844



வேலைவாய்ப்பு

ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை

மானிப்பாய்

ஓய்வுபெற்ற தமிழ் ஆசிரியர் தேவை

(இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்கும்படி அழைக்கின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு:

021 225 5628 / 077 615 9637

- பாடசாலை நிர்வாகம்

(cr39937) (N-1)


# யாழ். போதனா மருத்துவக் கழிவுகள்;

# கோம்பயன்மணல் மயானத்தில் எரியூட்டி அமைக்கத் தீர்மானம்

## ஒருங்கிணைப்புக் குழுவில் முடிவு

யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ். போதனா மருத்துவமனையின் மருத்துவக் கழிவுகளை எரியூட்டுவதற்கான எரியூட்டியை கோம்பயன்மணல் மயானத்தில் நிறுவுவதற்கு ஒருங்கிணைப்புகுழுவில் நேற்றுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் மருத்துவக் கழிவுகளை எரியூட்டுவதற்கான எரியூட்டி நிறுவுவதற்கு யு.என்.டி.பி. நிறுவனம் நிதி உதவி வழங்கியிருந்தது. எரியூட்டி அமைப்பதற்கான இடத்தைத் தெரிவு செய்வதில் நீண்ட இழுபறிநிலை நிலவியது. ஒவ்வொரு இடத்திலும் பொதுமக்கள் எதிர்ப்புக்கள் தெரிவித்தமையால் இடத்தெரிவில் காலதாமதம் ஏற்பட்டிருந்தது.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நேற்றைய தினம் இந்த விடயம் ஆராயப்பட்டது. இதன்போது யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி பங்கேற்று சில விளக்கங்களை வழங்கினார்.

'மருத்துவக் கழிவுகள் (கிளினிக்கல் வேஸ்ட்) என்பதில் உடலின் சில பாகங்கள், குருதி, சிறுநீர் போன்றவைதான் இருக்கும். முழுமையான உடலை தகனம் செய்கின்றார்கள். அதில் சில கழிவுகள் எஞ்சும். ஆனால், மருத்துவக் கழிவுகளை எரியூட்டிகள் ஊடாக தகனம் செய்யும் போது எவையும் மிஞ்சாது. சூழலுக்கு எரியூட்டி ஊடாக புகை செல்வதே தெரியாது. எரியூட்டியில் முதலில் 650 டிகிரியில் மருத்துவக் கழிவுகள் தகனம் செய்யப்படும். பின்னர் 800 தொடக்கம் ஆயிரம் செல்சியஸ் வெப்பத்தில் அவை இரண்டாவதாகத் தகனம் செய்யப்படும். இதனால் சூழல் பாதிப்பு ஏற்படாது. இதை மக்கள் பிரதிநிதிகள் மக்களுக்குத் தெளிவூட்டவேண்டும். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையிலும் சிறிய எரியூட்டி உள்ளது. எதிர்காலத்தில் அதுவும் இயக்கப்படும்' என்று மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவர் டக்ளஸ் தேவானந்தா, கோம்பயன்மணல் மயானத்தில் ஏற்கனவே உடல்கள் எரியூட்டப்படுகின்றன. அங்கே மருத்துவக் கழிவுகளை எரியூட்டுவதற்கு எதிர்ப்பு இருக்காது என்ற கருத்தை முன்வைத்தார். மக்களின் கருத்துக்களைக் கேட்டு முடிவு செய்யலாம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் சுட்டிக்காட்டினார். அதேபோன்று யாழ். மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலன், மாநகரசபையில் மக்கள் பிரதிநிதிகள் இருந்தபோது இது தொடர்பில் ஆராயப்பட்டிருந்தது. மக்களின் கருத்துக்களைக்கேட்டு அதற்கு அமைவாகச் செயற்படலாம் என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது என்பதைச் சுட்டிக்காட்டினார்.


இதன்போது கோம்பயன்மணல் மயானச் சபை சார்பில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட பிரதிநிதி, எரியூட்டி அமைப்பதற்கு நாம் இணக்கம் தெரிவித்துள்ளோம். எரியூட்டியின் புகைபோக்கியின் உயரம் 22 மீற்றராகும் என்று எமக்குத் தெரிவிக்கப்பட்டது. எனவே சூழல் பாதிப்பு ஏற்படாது என்ற வகையில் நாமும் இணங்குகின்றோம் என்று குறிப்பிட்டார்.

இதனையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், இ.அங்கஜன் மற்றும் வடக்கு அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் ஆகியோர் இணக்கம் தெரிவித்தனர்.

இதேவேளை - மயானம் யாழ். மாநகர சபைக்குச் சொந்தமானது என்ற அடிப்படையில் எரியூட்டி அமைப்பது தொடர்பில் போதனா மருத்துவமனை மாநகர சபையுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளவேண்டும் என்று மாநகர ஆணையாளர் த.ஜெயசீலன் கேட்டுக்கொண்டதை ஒருங்கிணைப்புக்குழு ஏற்றுக்கொண்டது. (ஓ,5)


2ஆம் ஆண்டு நினைவுநாள்

தோற்றம் 30.12.1953



மறைவு 23.05.2021

திரு. பெரியதம்பி பற்குணராஜா

(ஓய்வுபெற்ற காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபன பாதுகாப்பு உத்தியோகத்தர்)

இன்று போல் இருக்கிறது
இதயம் கனக்கிறது
ஈசனடி சேர்ந்து
ஈராண்டு ஆனதுவே
என்றும் எம் மனதில்
உங்கள் நினைவு நீங்காது.

லக்ஷ்மி வாசா,
மயிலங்கூடல், இளவாலை.

குடும்பத்தினர்.

(CS/50633) AH-1



கண்ணீர் அஞ்சலி

94ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் தலைவரும், 71 ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா பொருளாளரும், அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா முன்னாள் நிர்வாக சபை உறுப்பினரும், சிறந்த விளையாட்டு வீரரும், சிறந்த சமூக சேவகருமான

திரு.S.K.சண்முகலிங்கம்



அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

104ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா நிர்வாகசபை.

(CS 25103) A-1


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வேலையாள்கள் தேவை

வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனமொன்றுக்கு சிங்களம் பேசத் தெரிந்தவர்கள் தேவை.

**072 269 6417**

(CS/ 50632)AH-1

## வீடு வாடகைக்குத் தேவை

அராலி, வட்டுக்கோட்டை, சித்தங்கேணி, சங்கானை, மானிப்பாய், இணுவில் பகுதிகளில் சிறிய குடும்பம் (3பேர்) வசிக்கக் கூடிய, வாகனத் தரிப்பிட வசதியுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை.

**071 512 2250, 076 189 8626**

(CS 50632)AH-1

## மரண அறிவித்தல்

தோற்றம் : 05 . 04 . 1959



மறைவு : 30 . 05 . 2023

### திருமதி செல்வராணி நவக்குமார்

சரவணை கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராணி நவக்குமார் நேற்றுமுன்தினம் (30.05.2023) செவ்வாய்க்கிழமை சிவபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் அன்னம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான நவரத்தினம் தங்கரத்தினம் தம்பதியரின் பாசமிகு மருமகளும், நவக்குமாரின் அன்பு மனைவியும், அனோஜன், பிராசத் (பவா), ராகவி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற செல்வநாயகம் (குமாரு), பரஞ்சோதி மற்றும் குலமணி, சீதாலெட்சுமி, சத்தியலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.06.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக சரவணை புன்னாங்கண்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சரவணை கிழக்கு,**
**வேலணை.**
**077406 5824, 077 840 6520**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(Cs50629) N-1

## மரண அறிவித்தல்



### S.K. சண்முகலிங்கம்

(பரந்தன் இரசாயன தொழிற்சாலையின் முன்னைநாள் உத்தியோகத்தரும், யாழ் பரியோவான் கல்லூரியின் புகழ்பூத்த விளையாட்டு வீரனும்)

யாழ் புங்கன்குளம் அரியாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட S.K. சண்முகலிங்கம் (பரந்தன் இரசாயன தொழிற்சாலையின் முன்னைநாள் உத்தியோகத்தரும், யாழ் பரியோவான் கல்லூரியின் புகழ்பூத்த விளையாட்டு வீரனும்) கடந்த (29.05.2023) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா கந்தையா கனகம்மா தம்பதிகளின் மகனும் சின்னத்துரை செல்லம்மா தம்பதிகளின் மருமகனும் கமலாதேவியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான S.K மகாலிங்கம் (ஆசிரியர் பரியோவான் கல்லூரி), S.K பரமலிங்கம் (சிறைச்சாலை உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் புஸ்பராணி, கமலரஞ்சி அகியோரின் மைத்துனரும், அகிலன், செழியன், தேன்மொழி ஆகியோரின் பாசமிகு தந்தையும், நேதாஜி, சுபாசிறி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், மிதிலன், மஞ்சரி, அட்சயா, அபினன், நித்திலன் ஆகியோரின் பாசமிகு பேரனும் கமலநாயகி, வாமசிவன், வாமதேவன், வாமபாகன், தேவநாயகி ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும் காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை, திருஞானசுந்தரம், சதானந்தன், வீரலட்சுமி, சரஸ்வதி, அன்னலட்சுமி மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (01.06.2023) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு 57/1 புங்கன்குளம் வீதியில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்து பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

(CS/50631)AH-1

**தகவல்: குடும்பத்தினர்**

அகிலன் - +479 099 2261, செழியன் - [illegible]
தேன்மொழி - + 474 128 9717

## கண்ணீர் அஞ்சலி



எமது ஆலயத்தின் நிர்வாக உறுப்பினராக இருந்து, நிர்வாக செயற்பாடுகளுக்கும் ஆலயத்தின் வளர்ச்சிக்கும் பெரும் தொண்டாற்றிய

### சடையன் பரமன்

அவர்களின் மறைவு எமக்குப் பேரதிர்ச்சியாக உள்ளது. அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வீரகத்தி விநாயகனை பிரார்த்தனை செய்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**நம்பிக்கைப் பொறுப்பாளர்,**
**பரிபாலன சபையினர்,**
**கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில் முதலாய கோயில்கள்.**

(CS/50630)AH-1

## சொற்பொழிவு

சைவ வாழ்வியலில் பெரிய புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக, சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயப் பிரதான மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை சிறப்புச் சொற்பொழிவொன்று இடம்பெறவுள்ளது.

சைவப்புலவர் செ.த. குமரன் 'சிவனடியார்களுக்குத் திருவோடு அளிக்கும் நாயனார்' எனும் தொனிப்பொருளில் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (மு– ரி)

## இன்று சொந்த விருப்பப்படி ஓய்வுபெறும் எங்கள் அன்னையைப்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




தற்போது தென்மராட்சிக் கல்விவலய
**யா/ மீசாலை கமலாம்பிகை வித்தியாலயத்தில்**
ஆசிரியப் பணியாற்றிக்கொண்டிருக்கும் எங்கள் மம்மி, மாமி, அம்மம்மா, சின்னமகள், தங்கை, சின்னக்கா ஆகிய

### திருமதி கமலரஞ்சிதவனிதா சத்தியசீலன்

இ.ஆ.சே. 1 ,
பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி கல்விமாணி பட்டதாரி ஆசிரியர்

**இன்று (01.06.2023) வியாழக்கிழமை தனது 33 வருட ஆசிரியர் சேவையை நிறைவு செய்து சொந்த விருப்பத்தின்படி ஓய்வுபெறுகின்றார்.** இவரது ஆசிரியப்பணியைச் சிறப்பாக ஆற்றுவதற்கு வழிகாட்டிய எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி கூறுவதோடு, பணிவாழ்வில் துணையாக இருந்த கல்விவலய அதிகாரிகள், கோட்டக்கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்களுக்கு நன்றி தெரிவிப்பதோடு இவர் தனது ஓய்வு காலத்தில் உடல், உள, ஆன்ம சுகத்தோடு நீடூழி காலம் சந்தோஷமாக, ஆரோக்கியமாக வாழ அன்னை வேளாங்கண்ணி ஆரோக்கிய மாதாவின் துணைவேண்டி மனதார பெருமகிழ்வோடு வாழ்த்துகின்றோம்.

**சேவையாற்றிய பாடசாலைகள்**


- 15.03.1990 - 29.02.1992 - மு/ வள்ளுவர்புரம் பாரதி வித்தியாலயம்
- 01.03.1992 - 05.05.1998 - மு/ புதுக்குடியிருப்பு விக்கினேஸ்வரா வித்தியாலயம்
- 06.05.1998 - 31.12.2002 - மு/ புதுக்குடியிருப்பு றோ.க. வித்தியாலயம்
- 01.01.2003 - 15.01.2004 - யா/ மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
- 16.01.2004 - 18.07.2004 - யா/ சாவகச்சேரி இந்து ஆரம்பப்பாடசாலை
- 19.07.2004 - 31.12.2016 - யா/ மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயம்
- 01.01.2017 - 31 .05.2023 - யா/ மீசாலை கமலாம்பிகை விதியாலயம்


**வாழ்த்துபவர்கள்:**

| | | |
|---|---|---|
| கிறிஸ்ரா | - மகள் | - இயன்மருத்துவர் - U.K |
| அன்ரனிகமில்ரன் | - மகன் | - MED United Laboratory புதுக்குடியிருப்பு |
| பியர்லின் வைதேகி | - மகள் | - Nothern Cooperative Development Bank - Jaffna |
| தேவஷத்தியா | - மகள் | - University of West England |
| துஷ்யந்தன் | - மருமகன் | - தொழிலதிபர் - U.K |
| தனுஜா | - மருமகள் | - MED United Laboratory புதுக்குடியிருப்பு |
| லியாரா | - பேர்த்தி U.K | |
| கந்தையா மாகிறேற் | - அம்மா | - ஓய்வுபெற்ற அதிபர் - புதுக்குடியிரப்பு |
| ஜீவராணி | - அக்கா | - பரீட்சைத் திணைக்களம் - கொழும்பு |
| தவகுலரஞ்சினிதேவி | - தங்கை | - ஆசிரியர் - புதுக்குடியிருப்பு |
| [illegible] | - தம்பி | - பிரான்ஸ் |
| [illegible] | - தம்பி | - விளையாட்டு உத்தியோகத்தர் முல்லைத்தீ |
| [illegible] | - தம்பி | - உளவள உத்தியோகத்தர் - யாழ்ப்பாணம் |

(cs 39938) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





றம்பலம்
த்சுவர் இன்சொலால்
லார்தமை நண்ணினால்
வார்க்கு இனியான் நெற்றி
சிவாயவே.
ச்சிவாய திருப்பதிகம்)

ஒட்டுசுட்டான்

எண்ணெய்காப்பு
29.05.2023, 30.05.2023,
31.05.2023 ஆகிய
மூன்று தினங்கள்

# மர் வேகாவனேஸ்வரர்
# வஸ்தானம்)

மஹா கும்பாபிஷேகம்
01.06.2023 வியாழக்கிழமை
மு.ப. 11.10 முதல் 13.00
மணிக்கிடையில்

## ர் ஆலய ஜீர்ணோத்தாரண புனராவர்த்தன நூதன நவதள
## ஷ்டபந்தன மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம் - 01.06.2023 வியாழக்கிழமை.

### மஹாகும்பாபிஷேகதிற்குரிய கிரியா கால நியமங்கள்

**திங்கள் 12ம் நாள் (26.05.2023) வெள்ளிக்கிழமை**

5 மணி முதல் 6 மணி வரையுள்ள கோதூாலிகா சுபமுகூர்த்த வேளையில் விநாயகர் வழிபாடு, வருண ஜெபம், ஆச்சார்ய வர்ணம், பிராமண தேவ அனுக்ஞை, திரவ்ய சுத்தி, திரவ்ய விபாகம், டனம், கணபதி ஹோமம், வேதிதாடணம், நவக்ரஹ ஹோமம் விநாயகரகவல்கோளறு பதிக பாராணயம், யந்திர பூஜை நிறைவு, பிரசாதம் வழங்கல், மாலை 04.00 மணி முதல் முறை பாராயணம், கஜானனர், மகரவாஹனர் வழிபாடு, கிராம சாந்தி, பிரவேசபலி, மூர்த்திசாந்தி, சங்ஹிதாஹோமம், சிவபுராணபடனம், பிரசாதம் வழங்கல்.

**திங்கள் 13ம் நாள்(27.05.2023) சனிக்கிழமை**

0 மணிமுதல் வேத திருமுறைபாராயணம், கஜமுக அபாம்பதி பூஜை திசாஹோமம், ரகேஷக்ன ஹோமம், புதிய மூர்த்திகள், அதிவாசக்கிரியைகள், நயனோன்மீலனம், சயனாரோஹணம், சிவபுராண பிரசாதம் வழங்கல், மாலை 4.00 மணிமுதல் வேத திருமுறைபாராயணம் சுமுககணபதி, வருண பூஜை, உத்தமபதவாஸ்துசாந்தி, குண்டமண்டல வேதிகாஸ்தாபனம், கோமாதாபூஜை, கோவாசம் பாராயணம், பிரசாதம்வழங்கல்.

**திங்கள் 14ம் நாள் (28.05.2023) ஞாயிற்றுக்கிழமை**

0 மணிமுதல் வேத திருமுறை பாராயணம் ஏகதந்தர், வருண வழிபாடு, கங்காதீர்த்த சங்கிரணம், சூர்யாக்னி சங்கிரணம், மிருத்சங்கிரணம், பிரசன்னாபிஷேகம், பிரசன்னபூஜை, ஸ்துாபிஸ்தாபனம், படனம், பிரசாதம் வழங்கல்.

.30 மணி முதல் வேதபாராயணம், விநாயகர் பூஜை புண்ணியாகவாசனம், அங்குரார்பப்ணம், ரட்ஷாபந்தணம், தர்மத்வஜாரோஹணம், பிரதானயாக பூஜை, அக்கினிகார்யம், கடஸ்தாபனம், ணம், பிரதான மூர்த்தி கும்பங்கள், யாகாலய பிரவேசம், பரிதானயாகபூ.ஜை அக்னிகார்யம், கடஸ்தாபனம், கலாஹர்ஷணம், பிரதான மூர்த்திகள் யாகாயபிரசேனம், பரிவாரயாக பூஜைகள், அக்னி ர், மஹாயாக அக்னிவிபஜனம், ஸப்த, தச(17)குண்டஹோம வழிபாடுகள், பூர்ணாகுதிகள், பிரதக்ஷண நமஸ்கார சர்வாஞ்சலி சமர்ப்பணம், சிவபுராண பாராயணம் பிரசாதம் வழங்கல்.

**28.05.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 5.26 மணிமுதல் 7.33 மணிக்கிடையில் வரும் விருட்சிகலக்ன சுபமுகூர்த்த வேளையில் தீப, யந்திர, விம்பஸ்தாபனம் நிகழும்.**

### மஹா கும்பாபிஷேக குருமார்கள்

**சர்வ போதகர்**
"பிரதிஷ்டா திலகம்"
ந.இராஜாராம் குருக்கள்
ஸ்வரர் கோவில் ஒட்டுசுட்டான்

**குரு ஆசிகள்**
"கணேசபூஜா துரந்தர்"
சிவஸ்ரீ.ச.ரஞ்சிதானந்தக் குருக்கள்
(தேவஸ்தானம்)

"சித்தாந்த ரத்தினம்"
சிவஸ்ரீ.இ.கமலநாதக் குருக்கள்
(நாகபூஷணி அம்பாள் - லண்டன்)

**பிரதிஷ்டா பிரதமகுரு**
"சிவாகம ரத்தினம், ஆகம வித்திய சாஹரம்,
சிவஸ்ரீ. ரஞ்சித கீர்த்திவாசக் குருக்கள்
(பிரதம குரு தான்தோன்றீஸ்வரர் தேவஸ்தானம் ஒட்டுசுட்டான்)

**சர்வசாதகம்**
"சாதக சாஹரம்"
பிரம்மஸ்ரீ ப.சனாதனசர்மா
(சாவகச்சேரி)
சிவஸ்ரீ.இ.விருபாட்ஷகுருக்கள் - தேவஸ்தானம்

**ஆசி வழங்கும் குருமார்கள்**
"சித்தாந்த சரபம்" சிவஸ்ரீ. குமாரராஜம் குருக்கள் (இணுவில்)
"முத்தமிழ் குருமணி" சிவஸ்ரீ ந.சர்வேஸ்வரக் குருக்கள் (சுன்னாகம்)
"ஆகமப்ரவீண" சிவஸ்ரீ.கை.வாமதேவக் குருக்கள் (நைனாதீவு)
"மதுரமந்திரமாமணி" சிவஸ்ரீ.கு.சரவணபவக் குருக்கள்

**வேதபாராயணம்**
"வியாகரண சிரோன்மணி"
சோ.பிரசன்னாக் குருக்கள்
(இணுவில்)
மஸ்ரீ.கீ.கவியாலசர்மா
மஸ்ரீ.கீ.காருண்யசர்மா
(தேவஸ்தானம்)

**உபசாதகம்**
பிரம்மஸ்ரீ.வ.சுரமிசர்மா (அரியாலை)
பிரம்மஸ்ரீ.சி.ஆனந்தசர்மா (மாத்தளை)

**பிரதிஷ்டா மூர்த்திபர்கள்**

| | | |
|---|---|---|
| சிவஸ்ரீ.பா.கணேசக் குருக்கள் (நைனாதீவு) | சிவஸ்ரீ.பி.கிருபாஹரக் குருக்கள் (கோப்பாய்) | சிவஸ்ரீ.ம.துஷ்யந்தக் குருக்கள் (மாதகல்) |
| சிவஸ்ரீ.வ.உமாசுதக்குருக்கள் (மைலணி) | சிவஸ்ரீ.சு.கிரிதரக் குருக்கள் (ஆவரங்கால்) | சிவஸ்ரீ.ஜெ.ரவீந்திரக் குருக்கள் (கோப்பாய்) |
| சிவஸ்ரீ.ந.உ.அயராஜிதக் குருக்கள் (இணுவில்) | சிவஸ்ரீ.இ.துஷ்யந்தக் குருக்கள் (ஈச்சமு) | சிவஸ்ரீ.மு.வித்தியானந்தக் குருக்கள் (மீசாலை) |
| சிவஸ்ரீ.சு.ஜெனார்த்தனக் குருக்கள் ( ஊற்றங்கரை) | சிவஸ்ரீ.மு.பிரணவருக குருக்கள் (அரியாலை) | சிவஸ்ரீ.செ.சுகுமாரக் குருக்கள் (மல்லாகம்) |
| சிவஸ்ரீ.ஜெ.செந்தில்நாதக் குருக்கள் (புதுக்குடியிருப்பு) | சிவஸ்ரீ.சோ.கணேசராஜ குருக்கள் (அரியாலை) | சிவஸ்ரீ.தி.பிரகலாதக்குருக்கள் (பருத்தித்துறை) |
| சிவஸ்ரீ.க.கஜேந்திரக் குருக்கள் (வற்றாபளை) | சிவஸ்ரீ.ந.உ.கவிதாஸ் குருக்கள் (கொழும்பு) | சிவஸ்ரீ.க.கனகருபயகுருக்கள் (வவுனியா) |
| சிவஸ்ரீ.இ.சுயராஜக் குருக்கள் (முள்ளியவளை) | சிவஸ்ரீ.கு.குஹானந்தக் குருக்கள் (வவுனியா) | சிவஸ்ரீ.ந.சிவசாங்கரக் குருக்கள் (மயிலணி) |
| சிவஸ்ரீ.சிவ.குஹநாதக் குருக்கள் (வவுனியா) | சிவஸ்ரீ.ர.செல்வானந்தக் குருக்கள் (வவுனியா) | |

**யாகசம்ரக்ஷகர்கள்**

| | |
|---|---|
| .சயந்தன்சர்மா (வவுனியா) | பிரம்மஸ்ரீ.க.கௌரிசாங்கர்சர்மா (கிளிநொச்சி) |
| .ஸ்ரீவத்சலன்சர்மா (கோண்டாவில்) | பிரம்மஸ்ரீ.ம.தரணிதரசர்மா (மல்லாவி) |
| .சுபாஸ்கரன்சர்மா (சாவகச்சேரி) | பிரம்மஸ்ரீ.ச.சங்கர் சர்மா (சாவகச்சேரி) |
| .சோமநாதசர்மா (சித்தன்கேணி) | பிரம்மஸ்ரீ.ஸ்ரீ.அம்பிகநாதசர்மா (உடும்பிராய்) |
| .கோபிநாதசர்மா (கோப்பாய்) | |
| .நகுலேஸ்சர்மா (கொக்குவில்) | |

| பாகசாலை | ஆலய பாகசாலை | மங்கள வாத்தியம் | பூமாலை அலங்காரம் |
|---|---|---|---|
| ஸ்ரீ.ம.தியாகராஜா சர்மா (யாழ்ப்பாணம்) | செ.செல்வகுமார் ஐயா (ஒட்டுசுட்டான்) | சி.கருணாகரன்(கண்ணன்)குழுவினர் (தேவஸ்தானம்) | ச.சசிகுமார் குழுவினர் (தேவஸ்தானம்) |

| ராஜகோபுர ஆலயபுனர்நிர்மாணம் | ராஜகோபுர விக்கிரஹ அமைப்பு | ராஜகோபுர கதவு அமைப்பு | கருங்கல் விக்கிரஹ அமைப்பு | ஒலியமைப்பு | ஆலய வர்ணவேலை | கலச அமைப்பு |
|---|---|---|---|---|---|---|
| "சில்பசாஸ்திரநிபுண" க.விநோ ஸ்ரீ குழுவினர் (வவுனியா) | சந்திரசேகர் குழுவினர் (தமிழ்நாடு, இந்தியா) | இந்திரன் குழுவினர் (திருநெல்வேலி) | நாதன் குழுவினர் (வவுனியா) | இராசரத்தினம் குழுவினர் (நெடுங்கேணி) | காங்கேஸ் + இந்திரன் குழுவினர் (வசந்தன் - முள்ளியவளை) | சி.சுபநாதன் (கிளிநொச்சி) |

க உபயம் செய்யவிரும்புவோர் ஆலயத்தில் தொடர்பு கொண்டு முன் பதிவு செய்து கொள்
ள் (16.05.2023) அன்று மண்டல பூர்த்தியும் மங்களகர திருக்கல்யாண வைபவமும்
வீதி வெளிவீதியுலாவும் இடம் பெறும்.

**ஒளியமைப்பு**
சந்திரன் குழுவினர்
(பண்டாரிக்குளம்)

பதை பெருமையுடன்
றோம்.

1
7

Hotline-
+94 775 553 445

GNANAM PAINTS
No.558, Manipay Road, Oddumadam, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணக் குடிநீர் திட்டம்: 2024 இறுதியிலேயே ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ். குடாநாட்டுக்கான குடிதண்ணீர் விநியோகத் திட்டம் அடுத்த ஆண்டு டிசெம்பர் மாதம் அளவிலேயே ஆரம்பிக்கக்கூடிய சாத்தியம் உண்டு. அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டாலும் குடாநாட்டின் தேவையின் 50 சத வீதத்தையே பூர்த்தி செய்யமுடியும் என்று தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் முகாமையாளர் என்.ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போது அச்சுவேலியில் அமைந்துள்ள கைத்தொழில்பேட்டையின் குறைபாடுகள் தொடர்பில் ஆராயப்பட்டன. அங்கு முதலிட்டுள்ள முதலீட்டாளர்களுக்கு உற்பத்திகளை மேற்கொள்ள குடிதண்ணீர் தேவை என்று சுட்டிக்காட்டப்பட்டது.

இதன்போது பதிலளித்த முகாமையாளர் ஜெகதீஸ்வரன், வடக்கு ஆளுநர் அலுவலகத்தில் முதலீட்டாளர்கள் சிலருடன் சந்திப்பு நடைபெற்றது. அவர்களும் குடிதண்ணீர் கேட்கின்றார்கள். வடமராட்சி கிழக்கில் கடல் நீரை சுத்திகரித்து நன்னீராக்கி விநியோகிக்கும் யாழ்ப்பாண குடிதண்ணீர்த் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னரே அவர்களுக்கு குடிதண்ணீரை விநியோகிக்க முடியும். அதுவரை எம்மால் குடிதண்ணீரை விநியோகிக்க முடியாது.

260 மில்லியன் அமெரிக்க டொலரில் முன்னெடுக்கப்படும் அந்தத் திட்டம் அடுத்த ஆண்டு டிசெம்பரே நடைமுறைக்கு வரக்கூடும். அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டாலும் குடாநாட்டின் தேவையின் 50 சத வீதத்தையே பூர்த்தி செய்யமுடியும் என்று குறிப்பிட்டார்.

(அ-ஒ-5)

# விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 1

நல்லூர் ஜனசக்தி சனசமூக நிலையம் 75 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தும் விளையாட்டு நிகழ்வு இன்று முதல் எதிர்வரும் 4 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இன்று காலை 7 மணிக்கு ஆரம்பமாகவுள்ள நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் கலந்துகொள்ளவுள்ளார்.

எதிர்வரும் 3ஆம் திகதி சனிக்கிழமை மரதன் ஓட்டம் (7 மைல்) மறுநாள் சைக்கிளோட்டம் என்பனவும், தலையணை சண்டை, கயிறிழுத்தல், சங்கீதக்கதிரை, விநோதஉடை போன்ற பல விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# மருதடிவீரகத்தி விநாயகருக்கு நாளை தேர்

யாழ்ப்பாணம், ஜூன் 1

சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி அருள்மிகு வீரகத்தி விநாயகர் ஆலய தேர்த்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழா காலை 9.30 மணிக்கும் அதே நாளில் கொடியிறக்கம் இரவு 7 மணிக்கும் இடம்பெறவுள்ளன. (ச)

## பாலியாற்றுக்...

பணிப்பாளர் சுதாகரன், வடக்கு மாகாண பிரதம செயலர் சமன் பந்துலசேன, ஜனாதிபதியின் வடக்குக்கான இணைப்புச் செயலர் எல். இளங்கோவன், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ். பிராந்திய முகாமையாளர் என். ஜெகதீஸ்வரன் ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்துக்கான குடிதண்ணீர்த் திட்டம் தொடர்பில் பேசப்பட்டாலும் எவையும் இன்னமும் நடைமுறைக்கு வரவில்லை என்பதைச் சுட்டிக்காட்டிய அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், கீழ் பாலியாறு திட்டம் தொடர்பில் வடக்கு மாகாணசபை ஆராய்ந்து தீர்மானம் நிறைவேற்றியதைக் குறிப்பிட்டார். இந்தத் திட்டத்துக்கான சாத்தியக் கூற்று ஆய்வறிக்கைகள் கூட மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் கடந்த 2020ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்துடன் அவை கிடப்பில் போடப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார். இதனைத் துரிதப்படுத்தி நடைமுறைப்படுத்துவதன் ஊடாக எந்தவொரு தரப்பினருக்கும் பாதிப்பின்றி கடலுக்குச் செல்லும் மேலதிக குடிதண்ணீரை யாழ்ப்பாணத்துக்கு கொண்டுவரமுடியும் என்று குறிப்பிட்டார்.

இதனையடுத்து இது தொடர்பில் விரைவாக ஆராய்ந்து ஜனாதிபதியுடன் கலந்துரையாடி நிதியைப் பெற்று நடைமுறைப்படுத்துவதற்காகக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் கூட்டம் நாளை முற்பகல் 10 மணிக்கு யாழ். மாவட்டச் செயலகத்திலுள்ள மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவரின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (அ-ஒ,5)

## வீதியில்...

பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று மதியம் நெல்லியடிப் பகுதியில் நடந்துள்ளது.

பரீட்சை எழுதிவிட்டு வீடு திரும்பிய மாணவிகளுடன் வீதியில் மோட்டார்சைக்கிளுடன் நின்ற இளைஞர்கள் இருவர் சேட்டை விட்டதுடன், விரும்பத்தகாத வகையில் நடந்து கொண்டுள்ளனர். பரீட்சை எழுதிவிட்டு அந்த வழியாக வந்த சக மாணவன் ஒருவர் அதைக் கண்ணுற்று மாணவிகளை அவர்களிடம் இருந்து பாதுகாக்க முயன்றுள்ளார். அப்போது சேட்டை விட்ட இளைஞர்கள் இருவரும் தலைக்கவசத்தால் மாணவனைத் தாக்கிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் இருவரைக் கைது செய்துள்ளனர். சம்பவத்துடன் தொடர்புடைய மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர்கள் 21 மற்றும் 19 வயதுடையவர்கள் என்றும் அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை, வீதியோர 'ரோமியோக்கள்' தொடர்பாக பெற்றோரும், மக்களும் தொடர்ச்சியாகப் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர்.

யாழ். நகர்ப் பகுதி உட்படப் பல்வேறு இடங்களில் பாடசாலைகள் மற்றும் தனியார் கல்வி நிலையங்களுக்கு அருகில் கூடும் இளைஞர்கள் மாணவிகளுடன் சேட்டைகளில் ஈடுபடுகின்றனர் என்றும், விரும்பத்தகாத செயல்களில் ஈடுபடுகின்றனர் எனக் குற்றஞ்சாட்டப்படுகின்றது. அதேநேரம் மாணவர்கள் மத்தியில் போதைப் பொருள்களை பழக்கப்படுத்துவதற்கும் இது வாய்ப்பாகவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதுமட்டுமன்றி மோட்டார் சைக்கிள்களுடன் அவ்விடங்களில் தேவையற்று நிற்கும் இளைஞர்கள் அச்சம் தரும் வகையில் மோட்டார் சைக்கிள்களைச் செலுத்துகின்றனர் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. இந்த விடயத்தில் பொலிஸார் தீவிர கவனம் செலுத்தி நடவடிக்கை எடுத்து இவ்வாறான செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ-எ-26)

## யாழ்ப்பாணம்...

நேற்று நடைபெற்றது. அதில் இந்த யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

காங்கேசன்துறை வீதி, கஸ்தூரியார் வீதி, ஆஸ்பத்திரி வீதி, மின்சார நிலைய வீதி ஆகியவற்றில் போக்குவரத்துப் பொலிஸார் 24 மணிநேரக் கண்காணிப்பை இனிமேல் மேற்கொள்வார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதசாரிகள் கடவையில் வாகனங்கள் நிறுத்தப்பட்டாலோ அல்லது வாகனத்தின் பாகம் காணப்பட்டாலோ உடனடியாகத் தண்டம் விதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஆஸ்பத்திரி வீதியில் இரவு 7 மணி முதல் காலை 6 மணி வரையான காலப்பகுதிலேயே கனரக வாகனங்கள் பொருள்களை ஏற்றி, இறக்க முடியும். அதை மீறிச் செயற்படும் பட்சத்தில் தண்டம் விதிக்கப்படும். அதே நேரம் ஆஸ்பத்திரி வீதியில் காலை 6 மணி முதல் இரவு 7 மணிவரையான காலப்பகுதியில் போக்குவரத்துக்கு இடையூறாக, அனுமதி இன்றித் தரித்து நிற்கும் வாகனங்களுக்கும் உடனடியாகத் தண்டம் அறவிடப்படும்.

இந்த நடைமுறைகள் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நடைபெறும் சமூக விரோதச் செயற்பாடுகள் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்குவதற்கு அஞ்ச வேண்டிய நிலைமை காணப்படுகின்றது என்று கூட்டத்தில் சுட்டிக்காட்டப்படுகின்றது. பொலிஸாருக்கு வழங்கப்படும் தகவல்கள், தகவல் வழங்குபவரின் விவரம் உடனடியாகக் குற்றவாளிகளுக்குத் தெரியவருவதே இதற்குக் காரணம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. பொதுமக்கள் அச்சமின்றி தன்னிடம் தகவல்களை வழங்க முடியும் என்று யாழ்ப்பாண மாவட்டப் பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

(எ-5)

## சட்டவிரோத...

கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், தையிட்டி விகாரை தொடர்பான விடயத்தை பிரஸ்தாபித்தார். அந்த விகாரை தனியார் காணியில் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அந்தக் காணிகள் எப்போது விடுவிக்கப்படும் எனவும் கேள்வி எழுப்பினார்.

விகாரைக்குரிய காணியிலேயே கட்டப்பட்டுள்ளதாக முதலில் கருதியதாகவும் பின்னரே அது தனியார் காணியில் அமைக்கப்பட்டுள்ளமை தெரியவந்ததாகவும், அப்படியானால் விகாரை அமைத்தமை தவறு என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன், 'இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் சுட்டிக்காட்டியபோதும் அவர் அதனைச் செவிமடுத்தாரே தவிர தீர்வை வழங்கவில்லை' என்று குறிப்பிட்டார்.

கட்டப்பட்ட விகாரையை அகற்ற முடியாது. அந்த மக்களுக்கு வேறு காணிகளை வழங்கலாம் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். ஆனால், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. சட்டவிரோத கட்டடத்தை எப்படி அனுமதிக்கலாம்? என்று கேள்வி எழுப்பினர்.

இந்த விகாரைக்கான அடிக்கல் நடப்பட்ட மறுநாள் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், சட்டவிரோத விகாரை கட்டுமானத்தை நிறுத்தவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதே தீர்மானம் பின்னர் யாழ். மாவட்டச் செயலகத்திலும் நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது என்று மீண்டும் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரினர். யாழ். மாவட்டச் செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அத்தகையதொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டதா? என்பதை ஆராய்ந்தே அவ்வாறானதொரு தீர்மானத்தை மீள நிறைவேற்றமுடியும். இப்போது, அந்த விகாரைக்கு ஆட்சேபம் தெரிவிப்பதாகக் கருத்தை பதிவு செய்யலாம் என்று கூறி, அந்த விடயத்தை கிடப்பில் போட்டார் அமைச்சர் டக்ளஸ். (அ-ஒ,5)

## எரிபொருள்...

அறிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, ஒக்ரேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 20 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. 95 ஒக்ரேன் பெற்றோல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 385 ரூபா என அறிவிக்கப்பட்டுள்ளது.

லங்கா சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 10 ரூபாவால் அதிகரிப்பு .அதன் புதிய விலை 340 ரூபா என அறிவிக்கப்பட்டுள்ளது. மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 50 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 245 ரூபா என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாவலி...

மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையால் வடக்கில் வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களின் ஊடாக 'ஜே' வலயத்தை முன்னெடுப்பதற்குரிய தரவுகள் அதன் கீழ் உள்ளடங்கும் பிரதேச செயலர்களிடம் கோரப்பட்டிருந்தன. 37 கிராம அலுவலர் பிரிவுகள் இதன் கீழ் உள்ளடங்குகின்றன. இந்த விடயம் முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

மகாவலி 'எல்' வலயத்துக்கு ஏற்கனவே எதிர்ப்பு தெரிவித்து ஒருங்கிணைப்புக் குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை சுட்டிக்காட்டப்பட்டது. இந்த வலயத்துக்கு முல்லைத்தீவின் 34 கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கியிருந்தன. இந்தப் பகுதி மக்கள் எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர். அதன் அடிப்படையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இந்த நிலையிலேயே மகாவலி 'ஜே' வலயத்துக்கும் எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஜனாதிபதியுடன் நேரடியாகக் கலந்துரையாடப்படும் என்று நேற்றைய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ் நிர்மலநாதன், வினோநோகராதலிங்கம், கு.திலீபன், ரிஷாத் பதியுதீன் ஆகியோர் தெரிவித்துள்ளனர். (அ-ஒ-5)

## சட்டவிரோத...

டில் இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன் உட்படக் கட்சிப் பிரமுகர்களும், பொதுமக்களும் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

பொலிஸார் ஏற்படுத்தியிருந்த தடைகளை மீறிச் சென்று விகாரைக்கு எதிராகவுள்ள தனியார் காணியில் எதிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. நேற்று இரவும் எதிர்ப்புப் போராட்டம் தொடர்ந்தது. (எ-26)

## தனியார்...

படும் என்று யாழ். மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நேற்றைய தினம் இந்த விடயம் தொடர்பில் ஆராயப்பட்டபோதே மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சனி, ஞாயிறு தினங்களில் தனியார் வகுப்புகள் இடம்பெறும் இடங்களுக்கு அண்மையில் ரோந்து நடவடிக்கைகளை அதிகரிப்பதுடன் பொலிஸாரையும் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்துமாறு ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை விடுத்தார். இதனையடுத்து அதனைச் செயற்படுத்துவதாகக் கூட்டத்தில் பங்கேற்ற யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார். (அ-ஒ.5)

## பொருளாதார...

தீவக கல்வி வலயத்தில் கடந்த ஆண்டில் 46 பேர் இடைவிலகியுள்ளனர். இந்த ஆண்டின் முதல் 4 மாதங்களில் 4 பேர் இடைவிலகியுள்ளனர். வரவு ஒழுங்கற்ற மாணவர்களாகக் கடந்த ஆண்டு 109 பேர் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். இந்த ஆண்டு முதல் 4 மாதங்களிலேயே அது 113 ஆக அதிகரித்துள்ளது.

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் கடந்த ஆண்டில் 60 பேர் இடைவிலகியுள்ளனர். இந்த ஆண்டின் முதல் 4 மாதங்களில் 20 பேர் இடைவிலகியுள்ளனர். வரவு ஒழுங்கற்ற மாணவர்களாக கடந்த ஆண்டு 351 பேர் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். இந்த ஆண்டு முதல் 4 மாதங்களில் அது 35 ஆகக் குறைவடைந்துள்ளது.

வலிகாமம் கல்வி வலயத்தில் கடந்த ஆண்டில் 170 பேர் இடைவிலகியுள்ளனர். இந்த ஆண்டின் முதல் 4 மாதங்களில் 137 பேர் இடைவிலகியுள்ளனர். வரவு ஒழுங்கற்ற மாணவர்களாக கடந்த ஆண்டு 390 பேர் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். இந்த ஆண்டு முதல் 4 மாதங்களிலேயே அது 312 ஆக அதிகரித்துள்ளது.

தென்மராட்சிக் கல்வி வலயத்தில் கடந்த ஆண்டில் 7 பேர் இடைவிலகியுள்ளனர். இந்த ஆண்டின் முதல் 4 மாதங்களில் 14 பேர் இடைவிலகியுள்ளனர். வரவு ஒழுங்கற்ற மாணவர்களாகக் கடந்த ஆண்டு 92 பேர் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். இந்த ஆண்டு முதல் 4 மாதங்களிலேயே அது 59 ஆக அதிகரித்துள்ளது.

வடமராட்சிக் கல்வி வலயத்தில் கடந்த ஆண்டில் 72 பேர் இடைவிலகியுள்ளனர். இந்த ஆண்டின் முதல் 4 மாதங்களில் 25 பேர் இடைவிலகியுள்ளனர். வரவு ஒழுங்கற்ற மாணவர்களாக கடந்த ஆண்டு 87 பேர் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். இந்த ஆண்டு முதல் 4 மாதங்களிலேயே அது 65 ஆக அதிகரித்துள்ளது.

இந்தத் திடீர் அதிகரிப்புத் தொடர்பில் ஆராயப்பட்டது. பொருளாதார நெருக்கடி காரணமாக பெற்றோர் தமது பிள்ளைகளின் கற்றல் செயற்பாட்டை இடைநிறுத்தி கூலி வேலைகளுக்கு அமர்த்துவதாகக் கூறப்பட்டது. பாடசாலைகளில் மீளிணைத்தல் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டாலும் சில நாள்கள் பாடசாலைக்கு வந்து மீண்டும் வராமல் விடும் செயற்பாடே இடம்பெறுகின்றது என்றும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். 9ஆம் மற்றும் 10ஆம் தரத்துடனேயே அதிகளவானோர் இடைவிலகுகின்றனர் என்றும் தெரிவித்தனர்.

இதனையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், இடைவிலகலை சட்டத்தால் கட்டுப்படுத்தமுடியாது. இந்த விடயத்தை மானசீகமாகச் செய்யவேண்டும். பாடசாலை இடைவிலகல் ஊடாக எமது இளம் சமுதாயம் பெரும் பின்னடைவைச் சந்திக்கின்றது. எதிர்காலத்தில் இது மிகப் பெரிய பிரச்சினையை ஏற்படுத்தப்போகின்றது. பாடசாலை இடைவிலகலைக் கண்டும் காணாததுபோல் இருக்கமுடியாது. ஒவ்வொரு காரணங்களைக் கூறிக்கொண்டிருக்க முடியாது. நான் அதிபராக இருந்த காலத்தில் கிளிநொச்சியில் அரிவி வெட்டுக் காலங்களில் மாணவர்களைப் பெற்றோர் வயலுக்கு அழைத்துச் சென்றுவிடுவார்கள். அவர்கள் பாடசாலைக்கு வரமாட்டார்கள். அப்படியான சூழலில், பாடசாலைக்கு மாணவர்களை நேரம் தாழ்த்தி வருவதற்கு நான் அனுமதித்திருந்தேன். அத்துடன் ஒருநாள் அல்லது இரு நாள்கள் விடுப்பில் இருப்பதற்கும் அனுமதித்தேன். இவ்வாறு களச் சூழலை உணர்ந்து அதிபர்கள், அதிகாரிகள் கடமையாற்றுவதன் ஊடாகவே இடைவிலகலைக் கட்டுப்படுத்தலாம். இதில் எல்லோருக்கும் பொறுப்பு இருக்கின்றது - என்று தெரிவித்தார். (அ-ஒ-5)

## மீற்றர்...

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பயணிகள் சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகள் கட்டாயமாக கட்டண மீற்றர் பொருத்தியிருக்கவேண்டும். அவ்வாறு பொருத்தாத முச்சக்கர வண்டிகளுக்கு உள்ளூராட்சிமன்றங்கள் தரிப்பிடங்களில் நிறுத்துவதற்கு அனுமதி வழங்கக்கூடாது என்று ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நேற்றுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

முச்சக்கர வண்டிகளுக்கு கட்டண மீற்றர் பொருத்துவது தொடர்பில் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குப் பிரகாரமே நடவடிக்கை எடுப்பதாக யாழ். மாவட்டச் செயலக உதவி மாவட்டச் செயலர் சுட்டிக்காட்டினார். இது தொடர்பில் கடந்த காலங்களில் நடவடிக்கை எடுக்கப்பட்டதையும் சுட்டிக்காட்டினார். தற்போது முச்சக்கர வண்டிச் சங்கங்களையும் அழைத்துக் கலந்துரையாடி இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

கட்டண மீற்றர் பொருத்துவதற்கு ஒரே ஒரு நிறுவனம் மாத்திரமே தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும், கட்டண மீற்றருக்குரிய 27 ஆயிரம் ரூபா பணத்தை மாதாந்தம் 4 ஆயிரம் ரூபா வீதம் செலுத்துவதற்கு இணக்கம் காணப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், மாதாந்தக் கட்டணம் அதிகம் என்றும் மாதாந்தம் 2 ஆயிரம் ரூபா வீதம் செலுத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்யுமாறும், இந்தக் கட்டண மீற்றருக்கு தவணை அடிப்படையில் செலுத்தும்போது வட்டி அறவிடாது கட்டணத் தொகையைத் தீர்மானிக்குமாறும் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் குடாநாட்டில் எந்தவொரு தரிப்பிடத்திலும் கட்டண மீற்றர் பொருத்தாத முச்சக்கரவண்டிகளுக்கு தரிப்பிடத்தில் இடம் வழங்குவதில்லை என்றும், கட்டண மீற்றரை தவணை முறையில் பெற்றுக்கொண்ட முச்சக்கர வண்டி சாரதிகள் தவணைப் பணம் உரிய முறையில் செலுத்தவில்லை என்றாலும் தரிப்பிடத்தில் இடம் வழங்கக் கூடாது என்றும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மேலும், கட்டண மீற்றர் பொருத்தப்பட்ட பின்னர் முதலாவது கிலோமீற்றருக்கான கட்டணம் அதன் பின்னர் ஏனைய கிலோமீற்றர்களுக்கான கட்டணம், தரித்து நிற்பதற்கான கட்டணம் என்பன தொடர்பில் விரைவில் ஆராயப்படும் என்று மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார். (அ-ஒ-5)

## இந்திய...

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறும் இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்தும் வல்லமை இலங்கை கடற்படையினரிடம் இல்லை என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். கடற்படையினரின் டோறாப் படகைக்கூட இந்திய மீனவர்களின் படகுகள் சேதப்படுத்தக் கூடியன என்றும் அவர் குறிப்பிட்டார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அத்துமீறும் இந்திய மீனவர்கள் தொடர்பான விவகாரம் நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜனால் எழுப்பப்பட்டது.

2004ஆம் ஆண்டிலிருந்து இந்தியாவுடன் இது தொடர்பில் பேசி வருகின்றோம். அவர்களும் இரண்டு ஆண்டுகள் தாருங்கள் என்று கேட்கின்றார்கள். ஆனால், செய்யவில்லை. அவர்களுக்கும் தாங்கள் செய்வது தவறு என்று தெரியும். ஆனால், விடுகின்றார்கள் இல்லை. அத்துமீறும் இந்திய மீனவர்களின் பின்னால் தமிழக அரசியல்வாதிகள் இருக்கின்றார்கள். அதனால் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படவில்லை. எமது கடற்படையினர் இரண்டு காரணங்களுக்காக இந்திய மீனவர்கள் விடயத்தில் தயக்கம் காட்டுகின்றனர். அரசியல் காரணங்களுக்காகவும், இந்திய மீனவர்களின் படகுகளைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் அவர்களிடம் இல்லை என்பதாலும் தயங்குகின்றனர். இந்திய மீனவர்களின் படகுகள் மோதினால் கடற்படையினரின் படகுதான் சேதமாகும்' என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த கடற்படையின் வடக்கு மாகாண இரண்டாம் நிலை அதிகாரி, இந்திய மீனவர்களின் படகுகளைக் கைது செய்கின்றோம். அவர்கள் பல நூறு படகுகளில் வரும்போது கட்டுப்படுத்துவதற்கான வளம் எம்மிடம் இல்லை. இந்திய மீனவர்களை நாம் சுட்டுப்பிடிப்பதில்லை. அவர்களை மனிதாபிமானத்துடன் அணுகுகின்றோம். அத்துமீறும் மீனவர்கள் தொடர்பில் இராஜதந்திர ரீதியில் அணுகுவதே சிறப்பானது' என்று குறிப்பிட்டார்.

'இலங்கையின் பாதுகாப்பு அமைச்சுக்கு வரவு - செலவுத் திட்டத்தில் 20 சதவீதம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவது கடற்படையின் பொறுப்பு. எமது மீனவர்களைப் பாதுகாக்கமுடியாத கடற்படை எமது பிரதேசத்தில் எத்தனையோ தனியார் காணிகளை ஆக்கிரமித்து இன்னமும் ஏன் நிலைகொண்டுள்ளது?' என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கேள்வி எழுப்பினார்.

'அத்துமீறும் இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்தமுடியாது என்றால் நீங்கள் எப்படி இன்னொரு நாட்டிடம் இருந்து எமது நாட்டைக் காப்பாற்றப்போகின்றீர்கள்?' என்று நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன் கேள்வி எழுப்பினார்.

இந்திய மீனவர்கள் விவகாரம் தொடர்பில் இந்தியத் தூதுவருடன் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துரையாடுவது என்று தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் கடற்படையின் ஊடாக எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என்ற திட்டத்தை சமர்ப்பிக்குமாறு கடற்படை அதிகாரிக்கு ஒருங்கிணைப்புக் குழுவால் பணிப்புரை விடுக்கப்பட்டது. (அ-ஒ-5)

## தேவாலயத்...

வின்போது சுமார் 25 பவுண் நகைகள் பக்தர்களிடம் இருந்து திருடப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது. நகை திருட்டமை தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் நேற்று மூன்றுக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

சன நெரிசலைப் பயன்படுத்தி நகைகள் திருடப்பட்டுள்ளன. நகைகளைப் பறிகொடுத்தவர்களில் பெரும்பாலானவர்கள் முதியவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. நகைகளைப் பறிகொடுத்த ஏனையோர் இன்று முறைப்பாடுகள் செய்யலாம் என்று கூறப்படுகின்றது. முறைப்பாடுகளுக்கு அமைய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ-எ-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக ஊடகத்தால் சமூகச்சீரழிவு தராதரமின்றித் தண்டனை பாயும்

## நீதி அமைச்சர் சீற்றம்

கொழும்பு, ஜூன் 1

பொது நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் தீயநோக்கத்துடன் செயற்படும் எவராயினும் தராதரம் பாராது சட்டம் பாயும் என நீதி மற்றும் அரசமைப்பு விவகார அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சமூக ஊடகங்களை தவறாகப் பயன்படுத்தி சமூகச்சீரழிவுகள் இடம்பெற்று வருகின்றமை தொடர்பில் அண்மைக்காலமாக ஏராளமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

தேசிய ஒற்றுமை, மத நல்லிணக்கம் ஆகியவற்றுக்கு இடையூறு ஏற்படாத வகையில் செயற்படுவது ஒவ்வொரு தனிநபரின் பொறுப்பாகும்.

சமீப காலமாக மதக் குழுக்களின் உணர்வுகளைப் புண்படுத்தும் வகையில் அவதூறுகள் பரப்பப்படுகின்றன. எனவே சமூக ஊடகங்கள் இவ்வாறு சமூகவிரோதமாகச் செயற்பட்டால் அவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

நல்லிணக்கத்துக்கு எதிரான செயற்பாடுகளை விசாரிப்பதற்காக தனி பொலிஸ் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தீயநோக்கத்துடன் செயற்படும் எவராயினும் தராதரம் பாராது தண்டிக்கப்படுவர் - என்றார். (ச-இ)

# கடனட்டைப் பாவனை இவ்வருடத்தில் வீழ்ச்சி

கொழும்பு, ஜூன் 1

இந்த வருடத்தின் முதல் காலாண்டில் கடனட்டைப் பாவனையாளர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 2022ஆம் ஆண்டு இறுதியில் கடனட்டைப் பயனாளர்களின் எண்ணிக்கை 19 இலட்சத்து 52 ஆயிரத்து 991ஆகக் காணப்பட்டது.

இந்த வருடத்தின் கடந்த மார்ச் மாதம் வரையிலான காலப்பகுதியில் கடனட்டைப் பாவனையாளர்களின் எண்ணிக்கை 19 இலட்சத்து 39 ஆயிரத்து 541ஆக குறைவடைந்துள்ளது என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

# சாவ.மருத்துவமனையில் கண்புரை சோதனைகள்

சாவகச்சேரி, ஜூன் 1

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற பரிசோதனைகளில் கலந்து கொள்ளத் தவறியோருக்கு எதிர்வரும் 10 ஆம் திகதி சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ள நிலையில் அதற்கான பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.போதனா மருத்துவமனை கண்சிகிச்சை அலகால் தென்மராட்சிப் பிரதேச மருத்துவமனைகளில் பார்வையில் குறைபாடுள்ளோருக்கு இலவச கண்புரை பரிசோதனைகள் கடந்த ஏப்ரல் மாதம் தொடக்கம் பிரதி சனிக்கிழமைகளில் இடம்பெறுகின்றன.

இந்தநிலையில் கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி மருத்துவமனையில் இடம்பெற்ற கண்புரை பரிசோதனைகளில் அதிகளவானோர் பங்குபற்றியிருந்தனர்.

அன்றைய பரிசோதனையின்போது பங்கேற்கத் தவறியவர்களுக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 10 ஆம் திகதி சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் பரிசோதனைகள் இடம்பெறவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

# விரைவில் நவீனமாகும் பொதுப் போக்குவரத்து

## பந்துல குணவர்த்தன தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 1

பொதுப் போக்குவரத்தை தொழில்நுட்ப மயமாக்கும் செயற்பாடுகளுக்காக 12 நிறுவனங்கள் முன்வந்துள்ளன. அரச செலவின்றி இதனைச் செய்வதற்கான இந்தச் செயற்றிட்டத்துக்கு திறைசேரி, நிதி அமைச்சு, மத்திய வங்கி என்பன அனுமதியளிக்க வேண்டும் என அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகசந்திப்பு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றபோது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போக்குவரத்து அமைச்சு என்ற அடிப்படையில் பொதுப் போக்குவரத்தை தொழில்நுட்பமயமாக்குவதற்கான யோசனைகளைக் கோரியுள்ளோம். அரச செலவின்றி இதனைச் செய்வதற்கான யோசனைகள் தொடர்பில் 12 நிறுவனங்கள் முன்வந்துள்ளன.

அபிவிருத்தியடைந்த நாடுகளில் பொதுப் போக்குவரத்துகளில் நடத்துநர் ஒருவர் இருக்கமாட்டார். சாரதி சேவையில் இருப்பார். சேவைக்கு பணப்பரிமாற்றம் இடம்பெறாது. பணக் கொடுக்கல் வாங்கல்கள் தொழில்நுட்ப முறையினூடாகவே முன்னெடுக்கப்படும்.

அந்தவகையில் இங்கும் பொதுப் போக்குவரத்தை தொழில்நுட்பமயமாக்கும் செயற்பாட்டை மூன்று மாதங்களுள் முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம் - என்றார். (ச-இ)

# பிரமிட் மோசடியில் எட்டு நிறுவனங்கள்

## பட்டியலிட்ட மத்திய வங்கி

கொழும்பு, ஜூன் 1

தடைசெய்யப்பட்ட நிதித் திட்டங்களில் ஈடுபடும் எட்டு நிறுவனங்களை இலங்கை மத்திய வங்கி பெயரிட்டுள்ளது.

இதுதொடர்பில் மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கையில்,

தடைசெய்யப்பட்ட பிரமிட் திட்டத்தை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ செயற்படுத்துவது அல்லது வழிநடத்துவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

வங்கியால் பெறப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையில் எட்டு நிறுவனங்கள் பிரமிட் திட்டங்களை செயற்படுத்திய நிறுவனங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அந்த நிறுவனங்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன - என்றுள்ளது. (ச-இ)

# சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 1

சங்குப்பிட்டி கடற்கரைப் பகுதியில் உருக்குலைந்த நிலையில் சடலம் ஒன்று நேற்றுக் கரை ஒதுங்கியுள்ளது என்று கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

மீன்பிடி நடவடிக்கைக்குச் சென்ற மீனவர்கள் சடலம் கரையொதுங்கியுள்ளமை தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்துள்ளனர். சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். (எ-23,9)

# மாணவர்களுக்கான சுற்றுச்சூழல் பாசறை

யாழ்ப்பாணம், ஜூன் 1

சிறகுகள் அமையத்தின் யாழ். பிராந்திய சுற்றுச்சூழல் பிரிவின் ஏற்பாட்டில் தரம் - 6, 7, 8 மாணவர்களுக்கான சுற்றுச்சூழல் பாசறை நாளைமறுதினம் சனிக்கிழமை, மறுநாள் ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு தினங்கள் நடைபெறவுள்ளது.

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ணா வித்தியா சாலையில் காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணி வரை இந்தப் பாசறை இடம்பெறும். பயிற்சிப் பாசறையில் துறைசார் வல்லுநர்கள் வளவாளர்களாக பங்கேற்பதுடன் மாணவர்களுக்கு பங்குபற்றுதல் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்படும்.

பாசறையில் கலந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் www.sirakukal.live எனும் இணைப்பினூடாக இணைந்து பதிவுகளை மேற்கொள்ளலாம் என சிறகுகள் அமையத்தின் யாழ்.பிராந்திய சுற்றுச்சூழல் பிரிவினர் அறிவித்துள்ளனர். (ச-66,159)

# 'பின்னை ஒப்பிலக்கியம்' பல்கலையில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறையின் ஏற்பாட்டில் 'பின்னை ஒப்பிலக்கியம்' எனும் தலைப்பில் கருத்தரங்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடக் கருத்தரங்கு மண்டபத்தில் நாளை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசியர் கி.விசாகரூபன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வளவாளராக இந்தியாவின் தமிழ்நாடு, திண்டுக்கல் காந்தி கிராமம் பல்கலைக்கழக பேராசிரியர் பா.ஆனந்தக்குமார் பங்கேற்கவுள்ளார்.

வளவாளர் அறிமுகவுரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் ஆற்றவுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரன் நன்றியுரையை வழங்கவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)


காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 10 பரப்புக் காணி விற்பனைக்கு.

* பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் செல்லும் வீதியில்.
* புத்தூர் பிரதான தண்ணீர் தாங்கி அருகாமையில்.
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில், 18 அடி பாதையுடன்.
* ஒரு பரப்பின் விலை 120,000/= மட்டும்.

தொடர்பு: 076 733 6047, 076 7558 606.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.